தனிப் பிரதி விலை அணா 0—1—6
Reg. No. M. 3066. 1936-ஏப்ரல் 1.
PAHUTHARIVU ("REASON")
(இதழ் 12.)



ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

பகுத்தறிவு.

பல அறிஞர்களின் அறிவியல் ஆராய்ச்சிகள், விஞ்ஞான விளக்கம், பெண்கள் முன்னேற்றம், உடற் பயிற்சி, சுகாதாரம், வைத்தியம், பாட்டுகள், காடகங்கள், ஹாஸ்யங்கள், உலக விநோதங்கள், சிறு கதைகளும் கிறைந்து விளங்குவது

வருட சந்தா.

உள் நாடு ரூ.	1—0—0.	வெளிநாடு ரூ.	1—8—0.
தனிப்பிரதி	0—1—6.	தனிப்பிரதி	0—2—6.

சந்தாதாரர்களுக்கு

பகுத்தறிவுக்கு மே மாதமே வருட ஆரம்பமானாலும் சந்தாதாரர்கள் எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஜூலைமாதம் முதலில் இருந்துதான் பத்திரிகைகள் அனுப்பப்படும்.

புதிதாகச் சந்தா சேருபவர்கள் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிடவேண்டும்.

சந்தாதாரர் பத்திரிகை சம்பந்தமாய்க் கடிதம் எழுதும் போது சந்தா நம்பரைக் குறிப்பிடவேண்டும்.

விஷய அட்டவணை. பக்கம்.

பெண்பழி தீது (பாட்டு) (சாமி சிதம்பரனார்)	1
தர்மம் அல்லது பிச்சை (சு. வெ. ரா.)	3
ஜீவகாருண்யமா?	9
ஆலயங்கள் இருக்கவேண்டுமா? (ஞானானந்தன்)	14
பார்வதிக்கும், பரமசிவனுக்கும் சம்பாஷணை	27
சொர்க்கமாவது! நரகமாவது! (சாமி சிதம்பரனார்)	30
வைதீகம் தொலைக! (பாட்டு) (S. சிவப்பிரகாசம்.)	36
மனித சமூக உறவு முறை (சு. வெ. ரா.)	37
புதுமைப் பெண் (பண்டிதனஸ். முத்துசுவாமிப் பிள்ளை.)	42
கோவில் உற்பத்தியான இரகசியம் (பி. சிதம்பரம்)	50

பகுத்தறிவு.

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியீடு.

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர். (குறள்.)

மலர் 1. } ஈரோடு. 1936 எப்ரல். 1. { இதழ் 12.

பெண் பழி தீது.

(சாமி சிதம்பரனார்.)

1. பெண்பிறவி பாவமென்று பேசுகின்ற தேனோ?
மண்தனிலே எவர்பிறப்பும் ஒன்றெனவே அறியீர்

2. யானை பெற்ற கன்றிரண்டும் யானைக்கன்றே யன்றோ?
பூனையென்றே அவற்றிலொன்றைப் புகலுதலும்
[உண்டோ?

3. ஒரு வயிற்றுள் பிறந்தவருள் ஆண்கள் உயர் வென்பீர்!
சிறியர் என்றே பெண் மயிலைச் செப்புகின்றீர் எனோ?

4. இருகண்கள் தமில் ஒன்றை இழிவு செயல் அழகோ!
ஒருதாயின் கண்கள் என்றே ஆண்பெண்ணை அறிவீர்!

5. இழிந்த பொருள் பெண்கள் எனும் இகழ்ச்சியினால்
[கீழ்கள்
பழி செய்தே பெண்மணிகள் பலங்குறையச் செய்தீர்?

பகுத்தறிவு

6. வாழைதரும் குலைதாயின் வாழ்வழித்தல் போலே
தாழவைத்தீர் தாயினத்தைத் தன்னலத்தால் நீரே!

7. இல்லறமாம் தேர்ஓடக்க இரண்டுருளை வேண்டும்.
கல்லதொரு பெண்ணின்றேல் கடைபெறுமோ குடும்பம்?

8. உலகசுக வாழ்வு பெறும் பொறுப்பில் ஒரு பாதி
தலை சுமக்கும் மாதர்களைத் தாழ்த்திடுதல் அறிவோ?

9. மனதடக்க வழியறியா மடையர் எலாம் கூடி
வணிதையர்கள் காமத்தீ வளர்ப்பதென்றே சொன்னார்.

10. காதல் வழி நடந்து சுகப் பூஞ்சோலை யடையார்
தீதெனவே அறிவையரைத் திட்டிகலி சொன்னார்.

11. ஒத்தவர்கள் பொறுப்பினிலே ஆண்பெண் என
[உணர்ந்தும்
பித்தர் சொன்ன சாத்திரத்தால் பெரும்பழிகள் செய்தார்

12. இனியந்த சாத்திரஞ் சொல் இழிவுரைகள் சிதைப்பீர்!
புனிதமணி மாதர்களே என்றுரிமை தருவீர்!

மேல் லோகத்தில் ஒரு காலும் பூலோகத் தில்ஒரு காலும் வைத்துக் கொண்டு மோட்ச லோகத்தை எட்டிப் பார்த்துக் கொண்டிருக் கும் பெரியோர்களிடத்தில் எனக்கு வேலை இல்லை. அவர்களிடத்தில் கம்பிக்கையும் இல்லை. பரிசுத்த உள்ளமுடைய வாலிபர் களைத்தான் நான் கம்பி இருக்கிறேன். அவர் கள் தான் என் மனதைக் கொள்ளை கொண்ட வர்களாவார்கள். ஈ. வெ. ரா.

தர்மம் அல்லது பிச்சை.

ஈ. வெ. ரா.

தர்மம் அதாவது ஏழைகளுக்கு பிச்சை இடுதல் முதல் மற்றவர்களுக்கு பலவித உதவிகள் செய்வது என்பது வரை அனேக விஷயங்கள் தர்மத்தின் கீழ் சொல்லப் பட்டிருக்கின்றன.

இந்த மாதிரி தர்மத்தைப் பற்றி எல்லா மதங்களுமே முறையிடுகின்றன.

இந்து, முஸ்லீம், கிறிஸ்தவம், முதலிய மதங்களில் இந்த தர்மத்தை-பிச்சை கொடுத்தலை மிக சிர்ப்பந்தமாக கட்டாயப்படுத்தி சொல்லப்பட்டிருக்கிறது.

எப்படி எனில் தர்மம் கொடுக்காதவன் பாவி என்றும் அவன் நரகத்துக்கு போவான் என்றும், கடவுள் அவனை தண்டிப்பார் என்றும் இப்படியெல்லாம் பயமுறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது. இவை கடவுள் வாக்கெனவும் கூறப்பட்டிருக்கிறது.

இந்து மதம் என்பதில் தர்மத்தை 32 விதமாக கற்பித்து 32 தர்மங்களையும் ஒருவன் செய்ய வேண்டும் என்றும், அப்படி செய்தால் அவனுக்கு இன்ன இன்ன மாதிரி புண்ணியம் கிடைக்கும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதாவது, அறம் 32. ஒரு மனிதன் சத்திரம், படிப்பவர்களுக்கு சாப்பாடு, பக்தர்களுக்கு உணவு, பசுவுக்கு வாயுறை, கைதிகளுக்கு சாப்பாடு, இரப்பவர்களுக்கு பிச்சை, தின்பண்டம், அனாதிகளைக்காத்தல், பிள்ளைப்பேறுக்கு மருத்துவம் செய்தல், அனாதிப் பிள்ளைகளை வளர்த்தல், பிள்ளைகளுக்கு, பால் வார்த்தல், அனாதிப் பிணம் சுடுதல், ஏழை

களுக்கு ஆடை கொடுத்தல், வழிப்போக்கர்களுக்கு சுண்ணாம்பு கொடுத்தல், வைத்தியம் செய்தல், வண்ணான் உதவல், காவிதன் உதவல், கண்ணாடி காட்டுதல், காதோலை கொடுத்தல், கண்ணுக்கு மருந்து செய்தல், தலை முழுக்காட்ட எண்ணெய் தருதல், பெண்போகம் வேண்டுவோருக்கு போகப் பெண் உதவுதல், கஷ்டத்தில் சிக்குண்டவர்களுக்கு உதவி செய்து விடுவித்தல், தண்ணீர்ப் பந்தல் வைத்தல், மடம் கட்டுதல், ரோட்டுப்போடுதல், சாலைமரம் வைத்தல், மாடு எருமை ஆகியவை தங்கள் தினவுகளை தீர்த்துக்கொள்ள சொறிகல் கடுதல், மிருகங்களைக் காத்தல், கக்கூசு கட்டல், விலை கொடுத்து உயிர் மீட்குதல், பெண்தானம் செய்தல்.

ஆகிய 32 தர்மங்கள் செய்ய வேண்டியது ஒவ்வொரு மனிதனின் கடமை என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அதுபோலவே இஸ்லாம் மதம் என்பதிலும் அன்னியனுக்கு பிச்சைகொடுத்தாக வேண்டும் என்றும், அது ஒருவனுடைய வருஷவருமபடியில் அவனது சிலவுபோகமீதி உள்ளதில் 40ல் ஒரு பாகம் வருஷந்தோறும் பிச்சையாக பணம், சாப்பாடு துணி முதலியவைகளாய் கொடுக்கவேண்டும் என்றும்சொல்லப் பட்டிருக்கிறது.

இந்தப்படி செய்யா விட்டால் மதத்துரோகம் என்றும் இந்தப்படி செய்யாதவன் இஸ்லாம் ஆகமாட்டான் என்றும் கூட கூறப்படுகிறது.

அதுபோலவே கிறிஸ்தவ மதத்திலும் தர்மம் கொடுக்க வேண்டியது மிக முக்கியமானதென்றும், தர்மம் செய்யாதவனுக்கு மோட்சமில்லை என்றும், உதாரணமாக ஒரு ஊசியின் காதோட்டை வழியாக ஒரு ஒட்டகம் நுழைந்தாலும் நுழையுமே ஒழிய பிச்சை கொடுக்காத பணக்காரன் ஒரு காலும் மோட்சத்துக்கு போக மாட்டான் என்றும் சொல்லப்படுகிறது.

இந்தப்படிக்கு தர்மங்கள் செய்யவேண்டிய அவசியங்களை வற்புறுத்தி அந்த வற்புறுத்தல்களை பகவான் சொன்னான் ஆண்டவன் சொன்னான் என்று வேதங்கள் என்பவைகளிலும எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த தர்மங்கள் எல்லாம் இருக்கிறவர்கள் அதாவது செல்வவான்கள் இல்லாதவர்களுக்கு ஏழைகளுக்கு கொடுக்க வேண்டும் என்பது தான் இதன் தாத்பரியமாகும்.

செல்வவான்களுக்கு செல்வம் கடவுளால் கொடுக்கப் பட்டதாகும். ஆகையால் கடவுள் கொடுத்ததை கடவுளின் சிருஷ்டியாகிய — கடவுளின் பிள்ளைகளாகிய ஏழை மக்களுக்கு கொடுக்க வேண்டியது அவசியமாகும் என்பதே அந்த தாத்பரியத்தின் உள்கருத்தாகும். செல்வவான்களுக்கு கடவுள் செல்வங்களைக் கொடுத்தார் என்றால் செல்வமில்லாத ஏழை தரித்திரவான்களுக்கு செல்வமில்லாமல் செய்தது கடவுள் தான் என்பதை எந்த மதவாதியும், ஆஸ்திகனும் மறுக்க மாட்டான் என்றும், மறுக்க முடியாது என்றும் சொல்லு வேன்.

செல்வம் என்பது உலகத்தின் பொது சொத்து. அதை யார் உண்டாக்கியிருந்தாலும் உலகத்தில் உள்ளவரை எந்த ஜீவனுக்கும் அது பொதுசொத்தாகும். ஆனால் அந்த பொது சொத்தானது பலாத்காரத்தாலும், சூழ்ச்சியாலும், ஆட்சியா லும், கடவுள் போலும் ஒருவனுக்கு அதிகமாய்ப்போய் சே வும் மற்றொருவனுக்கு சிறிதுகூட இல்லாமல் தரித்திரம் பசி முதலியவை அனுபவிக்கவும் ஆன தண்மை உண்டாக்கப் படு கிறதே ஒழிய மற்ற எந்தக் காரணத்தாலும் எவனுக்கும் இல் லாமல் போக நியாயமே இல்லை.

ஆன போதிலும் கடவுளே ஒருவனை செல்வவா னாக ஆக்கினார் என்றும், கடவுளே ஒருவனை ஏழை யாக ஆக்கினார் என்றும், வைத்துக் கொள்வதானாலும் தர் மம்—பிச்சை கொடுக்கிற அதிகாரத்தை மாத்திரம் ஏன் பணக்காரனுக்கு கொடுத்து அவனுக்கு இஷ்டமிருந்தால் பிறத்தியானுக்கு பிச்சைபோட்டு மோட்சத்துக்கு போகும்படி யும் அவனுக்கு இஷ்மில்லையானால் பிச்சை கொடுக்காமல் இருந்து நரகத்துக்கு போகும்படியும் எதற்காக கற்பிக்க வேண்டும் என்பது நமக்கு புலப்படவில்லை. அன்றியும்ஏதோ இரண்டொரு பணக்காரன் பிச்சை கொடுத்து தர்மம் செய்து மோட்சத்துக்கு போவதற்காகவும் பலர் பிச்சை கொடுக்காமல் இருந்து நரகத்திற்குப் போவதற்காகவும்எத்தனையோகோடிக் கணக்கான பிச்சைக்காரர்களை என் சிருஷ்டித்தார் என்பதும் நமக்கு விளங்கவில்லை. செல்வம் கடவுளால்உண்டாக்கப்பட்ட தானால் ஏழையும் பணக்காரனும் கடவுளால் தானே உண்டா யிருக்க வேண்டும். இத்தப்படி ஒரு கடவுள் மூன்றையும் படைத்து ஏழைக்கும் பணக்காரனுக்கும வாங்கும் கொடுக் கும் உத்தியோகம் கொடுத்து இதற்கு கணக்கு எழுதி வைத்து அவனவனுக்குத் தகுந்த மோட்ச நரகத்துக்கு அனுப்பும்

வேலையில் கடவுள் ஈடுபட்டிருக்கிறார் என்றால் கடவுள் பக்தர்கள் கடவுளை பரமமூட்டாளாகவும் பரிசுத்தமடையனாகவும் சிருஷ்டிக்கிறார்களா அல்லது கடவுளை பரம கருணாநிதியாகவும் பார பட்சமற்ற தந்தையாகவும் சிருஷ்டிக்கிறார்களா என்று கேட்கின்றேன்.

ஏழையை சிருஷ்டிப்பானேன் பணக்காரனை சிருஷ்டிப்பானேன்? ஏழையை பணக்காரனிடம் போய் கெஞ்சும்படி செய்வானேன்? பணக்காரன் தனக்கு இஷ்டமிருந்தால் கொடுப்பதும் இஷ்டமில்லாவிட்டால் கொடுக்காமல் ஆளைவிட்டு கழுத்தைப்பிடித்து தள்ளச்சொல்லுவதும்என்?என்பவைகளை யோசித்துப்பார்த்தால் முதலில் இந்த தத்துவம் உண்மையாய் இருக்குமா என்பதே பெரிய சந்தேகமாய் இருப்பதோடு பரிசுத்த ஆஸ்திகத்தன்மையுடன் கடவுளை சிருஷ்டித்துப் பிரசாரம் செய்கின்ற மக்கள் எவ்வளவு முட்டாள்களாய் இருக்கிறார்கள் என்பதும் வெள்ளிடைமலையாகும்.

கடவுள் பார்த்து ஒரு உத்திரவில் அல்லது ஒரு சங்கல்பத்தில் எல்லாப் பொருளும் எல்லா மக்களுக்கும் பொதுவாய் இருக்கத்தக்கது என்று செய்துவிட முடியாதா? என்று கேட்பதோடு எல்லா ஜீவன்களையும் தானே சிருஷ்டித்து தானே கடத்துகிறவனாய் இருக்கிறபடியால் ஒன்றை ஒன்று தின்புறுத்தவோ ஒன்றை ஒன்று கொன்று தின்னவோ கூடாது என்று கிர்ணயித்து விட முடியாதா என்று கேட்கின்றேன். உண்மையாகவே ஒரு யோக்கியமான கடவுள் இருந்தால் இதை செய்திருக்க மாட்டாரா என்றும் கேட்கின்றேன்.

இந்தப்படி செய்வது முடியாத காரியம் என்று யாராவது சொல்லுவார்களானால் ரஷ்யாவில் லெனின் என்ற ஒரு மனிதன் இந்தப்படி உத்திரவு போட்டு பணக்காரரும், பிச்சைக்காரரும் இல்லாமல் செய்து விட்டாரே, இவர் கடவுளுக்கும் பெரியவரா? என்று கேட்கிறேன்.

ஆதலால் தர்மம்—பிறத்தியாளுக்கு பிச்சை கொடுப்பது, மற்றவர்களுக்கு உதவுவது என்கின்ற முறைகள் எல்லாம் பணக்காரத்தன்மைக்கு அனுகூலமானதே தவிர—பணக்காரத் தன்மையை கட்டோடற்ற ஏற்படுத்தப்பட்டதே தவிர, அவை ஒரு காலும் ஏழைகளுக்கும், பிச்சைக்காரர்களுக்கும் அனுகூலமானதல்ல.

ஏனெனில் பிச்சை கொடுப்பது, மற்றவர்களுக்கு உதவி செய்வது என்கின்ற காரியங்களால் தான் இல்லாத ஏழை மக்களை—தரித்திரவாசிகளான மக்களைப் பிரித்தாள முடியும். ஏழை மக்கள் பிரிந்திருந்தால் தான் பணக்காரர்கள் வாழமுடியும். அன்றியும் பணக்கார மக்கள்மீது ஏழைமக்களுக்குகுரோதமும் வெறுப்பும் இல்லாமல்இருக்கவேண்டுமென்கின்றகாரியத்திற்காகவே தர்மம் என்பதும், ஜக்காத் என்பதும், பிச்சை என்பதும் கற்பிக்கப்பட்டதே ஒழிய பிச்சைக்காரர்களுக்கு உதவி செய்வதற்கோ அவர்களைக் காப்பாற்றுவதற்கோ ஏற்பட்டதல்ல.

பிச்சைக்காரர் இருப்பதும், அவர்கள் பிச்சை எடுப்பதும் ஜனசமூகத்துக்கு ஒரு பெரும் தொல்லையும் இழிவுமாகும் என்பதோடு ஒரு கடவுள் இருந்தால் அக் கடவுளுக்கு மிகுந்த அவமானமும் அயோக்கியத்தனமான காரியமுமாகும்.

இந்தக் கருத்தை வைத்தே திருவள்ளுவரும் "பிச்சை எடுத்து வாழவேண்டிய மனிதனை கடவுள் சிருஷ்டித்து இருப்பானேயானால் அக்கடவுள் இல்லை யென்றுதான் அருத்தம், அவன் இருந்தாலும் ஒழிய வேண்டியதே அவசியம்" என்று சொல்லியிருக்கிறார்.

திருவள்ளுவர் நூலில் முன்னுக்குப்பின் முரண்கள் பல இருந்தாலும், அவர் ஒரு தனிஉடமைக்காரரேயானாலும் இந்த ஒரு விஷயத்தில் தைரியமாய்ச் சொல்லியிருக்கிறார்.

ஆனாலும் இதற்கு முரணாக மற்றொரு இடத்திலும் சொல்லி இருக்கிறார். அதாவது "தர்மம் செய்தவனையும் பாவியையும் பார்க்க வேண்டுமானால் பல்லக்கில் போகிறவனையும் பல்லக்கு சுமப்பவனையும் பார்" என்று சொல்லியிருக்கிறார். ஆகவே இதிலிருந்து தர்மம் செய்ததினாலேயே பல்லக்கில் போகும்படியான செல்வவானாகப்பிறந்தான் என்றும், தர்மம் செய்யாததினாலேயே பல்லக்குத்தூக்கும் தரித்திரனாகப் பிறந்தானென்றும் சொல்லுகிறார்.

அப்படியானால் ஏழை பணக்காரத்தன்மையை திருவள்ளுவர் ஆதரிக்கிறார் என்பதாக ஒரு புறத்தில் விளங்குகிறது. இந்த முரணும் மயக்கமும் ஏற்பட்டதற்குக் காரணம் இவருக்கு கடவுள் தன்மையில் ஆத்மார்த்தத்தில் இருக்க கம்பிக்கையேயாகும். கடவுள் தன்மை அதாவது "மனிதத்தன்மை

க்கு மீறின ஒரு சக்தி இருக்கிறது. அதற்கும் உலக கடவுடிக் கைகளுக்கும் சம்மந்தம் உண்டு'' என்று எவன் கருதினாலும் அப்படிப்பட்டவன் முன்னுக்குப்பின் முரணாகவும், தனி உடமைக்காரனாகவும், உயர்வு தாழ்வை ஆகரிக்கிறவனாகவும் இருந்துதான் தீருவான்.

எது எப்படி இருந்த போதிலும் உலகத்தில் மனித சமூகம் தொல்லை இல்லாமல் வாழ வேண்டுமானால் பிச்சை கொடுப்பதும் பிச்சை எடுப்பதும் சட்டவிரோதமனே காரியமாய்க் கருதப்பட வேண்டும். அப்படியானால் தான் மனிதன் சுயமரியாதையோடு வாழ முடியும். பிச்சை கொடுக்கும் வேலையை சர்க்காரே ஏற்றுக்கொண்டு அதற்கு பணம் வேண்டுமானால் பணக்காரரிடம் இருந்து பிச்சை வரி என்று ஒரு வரியை கிருஸ்து சொன்ன கணக்குப்படியோ முகம்மது நபி சொன்ன கணக்குப்படியோ சர்க்கார் வசூலித்து அதற்கு ஒரு இலாக்கா வைத்து வினியோகிக்க வேண்டும். அந்தப் பிச்சையை சர்க்கார் தொழில்சாலைகள் வைத்து அதன் மூலம் பிச்சைக்காரர்களிடம் வேலை வாங்கிக்கொண்டு வினியோகிக்க வேண்டும். இந்தக் காரியத்துக்காக சர்க்கார் எந்த தொழில்சாலை வைக்கிறார்களோ அந்தமாதிரி தொழில்சாலையை மற்றவர்கள் வைக்காமல் தடுத்துவிட வேண்டும்.

இப்படிச் செய்தால் பணக்காரர்கள் ஏற்பட்டு நாசமாய்ப் போனாலும் பிச்சைக்காரர்கள் தொல்லையாவது இல்லாமல் போய்விடும். பணக்காரத்தன்மை ஆட்சியில்லாத தேசம் எதிலும் இந்தக் காரியம் சுலபமாய் நடத்தலாம்.

ஆகவே தர்மம் செய்வது அக்கிரமம் என்றும், ஜன சமூகத்துக்கு தொல்லைனன்றும், பணக்காரர்களின் அயோக்கியத்தனங்களை மறைக்க ஒரு ஆட்சி என்றும் சொல்லுகிறேன்.

''காந்தியார் ஆதிதிராவிடர்களை குடிகாரர்கள் என்றும் மாட்டு மாம்சம் சாப்பிடுகிறவர்கள் என்றும் பேசி கம்மவர்களை அவமானப்படுத்தி இருக்கிறார். இது பெரியதொரு தப்பிதமாகும். இவ்விஷயத்தில் காந்தியார் ஏட்டுச் சுரக்காய்.''

எம். சி. ராஜா.

ஜீவகாருண்யமா?

1. உயிர்க்கொலை புரிதல். 2. புலாலுண்ணல். 3. கள்ளருந்தல் 4. பலியிடல். 5. சிறுதெய்வ வழிபாடு.

சகோதர சகோதரிகளே !

செந்தண்மை பூண்டொழுகும், நம் செந்தமிழ் நாட்டினிடத்து மேற்சொன்ன ஐந்தும் புகுந்ததின் வரலாற்றை அறிஞர்கள் களிக்கக் கூறுகின்றோம். சித்த சமாதானத்தோடு ஆராய்ந்து உண்மையைக் கடைப்பிடிப்பீர்களாக.

பல நூற்றாண்டுகளுக்கு முன் இந்தியாவுக்கு வடக்கேயுள்ள இமாசலத்துக்கு வடபால் குளிர் மிகுந்த நாட்டில் பிரமக்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்னும் நான்கு வகுப்பினராகிய ஆரியர்கள் வசித்தபோது அவ்விடத்தில் போதுமான கவதானியங்களும் கந்தமூலபலங்களும் இல்லாக்குறைவால் அவர்களுக்குப் பெரிதும் புலாலுணவு அவசியம் ஏற்பட்டது. பின்னர் அவர்கள் பல்கிப்பெருகி இந்தியாவுக்குள் புகுந்தபோதும் அவ்வுணவே அவர்களுக்கு இன்றியமையாதிருக்கது.

ஆரிய மன்னராகிய இராமர் காலத்திலிருந்து நமது ஆராய்ச்சியை ஆரம்பிப்பாம். இராமர் அரசுபுரிந்த காலத்தில் அவர் குடும்பமும் பிரஜைகளிற் பெரும்பான்மையோரும் மேற்கூறிய ஐந்தையும் ஏற்றுக்கொண்டு வாழ்வு நடத்தியதாகத் தெரிகிறது. அயோத்தியா காண்டம் (சருக்கம். 52) "சீதை கங்காநதியைக்கடக்கும்போது அனேகபசுக்களையும், ஆடைகளையும், நல்ல உணவுகளையும், பிராமணர்களுக்குக் கொடுத்து உன்னைத் திருப்தி செய்கிறேன். பல்லாயிரம் கட்குடங்களாலும் பலவகை மாமிசங்களாலும் உன்னையும் உன் கரையிலுள்ள பிற தெய்வங்களையும் திருப்தி செய்கிறேன்" என்று வேண்டியதாகவும், (சருக்கம் 55,) பின், யமுனாநதியைக் கடக்கும்போதும் "நான் சுகமாக அயோத்தியை யடையும்போது உனக்கு ஆயிரம் ஆயிரம் பசுக்களாலும், கட்குடங்களாலும் பூசை செய்கிறேன்" என்று பிரார்த்தித்ததாகவும்

வால்மீகி கூறுகிறார். அன்றியும் (சருக்கம் 52) இராமரும் இலக்குமணரும் மத்சகாட்டில் வந்தபோது அங்கே காட்டுப் பன்றிகளையும் ரிசியம் முதலிய பெரிய மான்களையும் விரைவிற் கொன்று ஒரு மரத்தடியில் உட்கார்ந்து தின்றதாகவும், (சருக்கம் 55) யமுனாநதியைத் தாண்டினவுடன் அவ்விருவரும் சீதையும் காட்டு மிருகங்களைக் கொன்று அருந்தியதாகவும் கூறுகின்றார். அல்லாமலும், அவ்விடத்தில் (சருக்கம் 56) ஒரு குடிசையை அமைத்து நின்ற இலக்குமணரை இராமர் நோக்கி "தம்பி! நான் இக்குடிசையின் அதிதேவைக்கு மானினுடைய மாமிசத்தைக் கொண்டு யாகஞ் செய்யவேண்டும். அதற்காக மிருகத்தைக் கொன்று சீக்கிரம் எடுத்துக் கொண்டுவா" என்று ஆணையிட்டதாகவும் கூறுகிறார். மேலும் பாத்துவாஜ முனிவர் பரதனுக்கும் அவனது சேனையிலுள்ளவர்களுக்கும் விருந்தளித்தபோது அவ்விருந்தில் ஆட்டு மாமிசங்களும், பன்றி மாமிசங்களும் நிரம்பி இருந்ததாகவும், விசித்திரமாகப் பக்குவஞ் செய்யப்பட்ட மான், மயில், கோழி முதலிய பிராணிகளின் இறைச்சிகளும் சூடாகப் பானையில் வைக்கப்பட்டதாகவும், மைரேயம், சுரா என்னுஞ் சாராயம், கள் முதலிய பானங்களும், விருந்தில் அளிக்கப்பட்டதாகவும் கூறுகிறார். முனிவரது யோகமஹிமையால் பிரமனும் குபேரனும் ஆயிரம் ஆயிரமாக தாசிகளை அனுப்பியதாகவும், சில செடிகள் பெண்களின் உருவெடுத்து "கட்குடியில் விருப்பமுள்ளவர்களே! உங்கள் விருப்பப்படி எங்களை அநுபவியுங்கள்" என்று கூறினதாகவும் கூறுகிறார். மேலும் கோசலை பரதனைப் பார்க்க வந்து அவனை மிகநிந்தித்தபோது பரதன் கூறிய சபதம் "எள்ளன்னம், பாயசம், ஆட்டின் மாமிசம் ஆகிய இவற்றைத் தேவதைகளுக்கும், விருந்தினருக்கும், பிதுர்க்களுக்கும், உண்பிக்காமல் எவன் உண்கிறானோ அவன் நரகமெல்லாம் எய்துவன்" என்பதே இதனால் விருந்தினருக்கும், தேவதைகளுக்கும் உயிர்க்கொலையும் புலாலுணவும் செய்யவேண்டியதென்பது ஆரியரது கொள்கையாய் இருந்து வந்தது. இவற்றையெல்லாம் தமிழராகிய கம்பர் மறைத்தனர். ஏனெனின் தமிழர் சுத்தவுணவை உடையவரன்றோ!

பிதிர்க்களுக்குத் திதி கொடுக்கும்போதும் சில குறிப்பிட்ட பிராணிகளின் மாமிசங்களைக் கொண்டே சிராத்தஞ் செய்யவேண்டுமாம். இதற்கு மநுதர்ம சாஸ்திரமே மேற்கோள். மூன்றாவது அத்தியாயம் சுலோகங்கள் 268, 269,

270, 271, 272. ஐந்தாம் அத்தியாயம் சுலோகங்கள் 16, 18 சுலோகம் 30. பிராமணன் புசிக்கத் தகுந்த பிராணிகளை காடோறும் உண்பதால் பாவமடைவதில்லை என்று கூறுகி றது. இவற்றையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்தால் ஆரியரிற் பெரும்பான்மையோர் மாமிச பட்சணிகளாகவே இருந்தார்க ளென்றே வெளிப்படுகின்றது. கள்ளருந்தல், புலால்புசித்தல், சிறுதெய்வ வழிபாடு, பிராணிகளைப் பலியிடுதல் முதலிய கொடிய பழக்கங்களெல்லாம் இவ்வாரியர்சனிடத்தில் வழங்கி வந்ததாக ஏற்படுகின்றது. அரசன் எவ்வழி அவ்வழி குடி கள்.

நிற்க, இவ்வாரியர் தென்னிந்தியாவென்னும் தமிழ் நாட் டில் பரவத்தொடங்கியபோது இந்நாட்டில் வாழ்ந்தோர் தமிழ ரெனவும், அவர்கள் அந்தணர், அரசர், வணிகள், வேளாளர் என நான்கு பெரும் பகுதியினராய் வாழ்ந்தனரெனவும், அவர் களுக்குள் தொழில் முறையில் வேறுபாடே தவிர உடனுறைவு, உடனுணவு முதலியவற்றில் வேறுபாடில்லாமல் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல் வாழ்ந்து வந்தனரெனவும், அவர்களுக்கு உயிர்க்கொலை புரியாமையே முக்கிய தவமென வும், மாசுக்கறியுணவே முக்கிய புசிப்பெனவும் பண்டைத் தமிழ் நூல்கள் அறிவிக்கின்றன. அவர்களுக்கு ஒரே குலமும் ஒரே தெய்வமும் இருந்ததாகத் தெரிகிறது. ஆரியர்கள் வந்த பிறகு தான் மேற்சொன்ன அவர்களது தீய பழக்கங்களெல் லாம் இவர்களிடைப் புகுத்தப்பெற்றன. தற்காலத்தில் இந்தி யாவில் நான்கு வகுப்புடைய ஆரியருள் ஒரே குலத்தான் இருக் கின்றது. அது பார்ப்பன வகுப்பே. ஏனைய வகுப்பெல் லாம் அழிந்தொழிந்தன. இப்பார்ப்பனர் தமிழ் மக்களோடு கெருங்கிப் பழகி, அவர்களுடைய சீலங்களைத்தாம் கைப்பற் றிக்கொண்டு அரசாங்க உதவியாலும் தங்கள் தவத்தாலும் தாமே உயர்ந்த வகுப்பினரெனவும், தம்மின் வேறான மக்கள னைவரும்சூத்திரரெனவும் அழைக்கத்தலைப்பட்டனர். சூத்தி ரர் என்றால் அடிமை என்று பொருள். அன்றியும் நீதிகள் ஆணுக்குவேறு பெண்ணுக்குவேறுஎன்றும், ஒரு குலத்துக்கு ஒரு நீதி, மற்றொரு குலத்துக்கு வேறு நீதி யென்றும் சாஸ்தி ரம் அமைத்துக்கொண்டனர். இவை யாவும் பிறரைத் தாழ்த் தும்மாறு எழுதிவைத்த சூழ்ச்சிகளே. தமிழ் மக்களுக்கோ என்றைக்கும் ஒரே நீதி. அது திருவள்ளுவர் செய்த திருக் குறளே யாகும்.

தென்னாட்டுப் பார்ப்பனரோ தமிழ் மக்களிடைக்காணப் படும் சிறந்த கொல்லாமையைக் கற்றுக்கொண்டு புலாலுணவை முற்றுந்தவிர்த்தனர். சிலர் ஒவ்வோர் காலத்தில் யாகஞ்செய்து புலாலுணவைக் கொள்வதனால் தமிழ் மக்களிற் சிலரைத் தம் வசப்படுத்திக்கொண்டு, சிறு தெய்வங்களுக்கு உயிர்ப்பலியிடும் படி போதித்து உணவைப்புசிக்குமாறு வற்புறுத்திவிட்டனர். சில விதிகளையும் சிறந்த நூல்களிற் புகுத்திவிட்டனர். இவர் களது சூழ்ச்சிவலையிற் சிக்குண்ட தமிழர் புலாலுணவைக் கற்றுக் கொண்டனர். மேலும் சிறு தேவதைகளுக்குப் பூசை செய்யும்போது கட்டாயம் ஆடு, மாடு, கோழி, பன்றி முதலிய பிராணிகளைப் பலியிட்டு அவற்றின் உணவைத் தின்னவேண்டு மென்றும், இல்லையானால் காலரா முதலிய கொள்ளை நோய் பரவி விடுமென்றும் பயமுறுத்தினர். இப்பயத்துக்கு அஞ்சி யே பார்ப்பனரல்லாதார் களதுவரையிலும் அத்தீய கொள் கையைக் கைப்பற்றி வருகின்றனர். பண்டைத தமிழ் நூல் களை கன்கு பயின்று உண்மையை யுணர்ந்துகொண்டசில அறி ஞர்களது கான் முயற்சியால சிறு தெய்வங்களுக்குப் பலியிடு தல் காலுக்கு கால் குறைந்து வருகின்றது.

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே!

பொருள், புகழ், அடிமை இம் மூன்றையும் விரும்பிய ஆரி யர்கள் செய்த சூழ்ச்சித் தீமைகளை முற்றுந்தவிர்த்து விடுங் கள். கொல்லா விரதத்தையே கைக்கொள்ளுங்கள். தம் வயிற் றுப் பிழைப்பையும், வாழ்வையும் உத்தேசித்து ஆரியப் புரோ கிதர் புனைந்துரைக்கும் கேவலமான இழிந்த புரட்டுகளுக்குச் செவிகொடுத்து மயங்காமல் மெய்யறிவு பெற்று நல்வழிப் பட முந்துங்கள்! முந்துங்கள்! உயிர்ப்பலியைத்தடுக்க மக்கள் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. இதில் பிராமணரெனவும், பிராமணரல்லாதாரெனவும் பிணக்கு வேண்டாம். தமிழ்நாட் டிலுள்ள பிராமணருள் பெரும்பான்மையோரான சைவவேளா வர்கள் ஆரியரல்லர். அவர்கள் தமிழரே. இதற்குச் சான்று தென்கலை வைணவரே. இவர்கள் ஆரிய வழக்க ஒழுக்கங் களை மேற்கொண்டவர். பலியிடுதல் முதலிய உயிர்க்கொலை புரியாமையே இவர்களது பேறம். உயிர்க்கொலை புரிவ தற்கு இவர்கள் ஒருபோதும் ஆதரவு நல்கார். இவர்களும் அற வழியில் நின்று கொலையை யொழிக்கத் தலைப்படுவார்களாக.

சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே ஆரியர்களுக் காகவே ஏற்பட்ட உயிர்க்கொலை முதலிய வழக்க ஒழுக்கங்க

ளைக் கூறும் கர்மகாண்டப் பகுதிகள் அருளாளர்களாலும், ஆழ்வாராதிகளாலும், உண்மை நாயன்மார்களாலும், பட்டினத்தார், தாயுமானவர், இராமலிங்கர் முதலிய போறிஞர்களாலும் கண்டிக்கப்பட்டு மண்மூடிப் போன பிறகுங்கூட, இக்காலத்துக்கு அவை அவசியமெனக்கூறி பார்ப்பனரல்லாதாரை இன்னும் இழிந்த நிலையில் வைப்பது புரோகிதருடைய தீய எண்ணமும் புரட்டுமேயாகும். இழிந்த நிலையிலுள்ளோர் உயர்ந்த நிலைக்குவர இவர்கள் ஒருபோதும் உன்னார்கள். இவ்வூரிலுள்ள புரோகிதர்ஒருவர் கிராமதேவதைக்கு பலியிடுதல் அவசியமென்று வற்புறுத்துகிறார். தாம் அப்படிச் செய்வாரென்று நாங்கள் அவரை அணைகூவி அழைக்கின்றோம். அவர் வந்து தமது கொள்கையைச் சாதித்துக்கொள்ளட்டும். ஸாமவேதத்தின் கண்ணுள்ள வஜ்ஜிர ஸூசிகோபநிஷத்தை இவர் கன்றாகப் பயின்றிருப்பாராயின் இவ்வாறு பலியிடும்படி கூற ஒருபோதும் உடனபடார்; உடன்படார். ஜகயினாலே அருளாளர்களே! பகுத்தறிவுடையவர்களே! அறவழியில் போராட எழுந்திருங்கள்! எழுந்திருங்கள்! ஸ்மிருதி புராணேதிகாசங்களினுள்ள பூர்வபட்ச சாமான்ய வாக்கியங்களின் மீது பழி சுமத்திக் கொலைப்பாவத்தையும், சிறு தெய்வங்களுக்குப் பலியிடுதலையும் நீங்கள் செய்யாதீர்கள். கொடிய பாவம் மேவிடும். அதற்கு ஆளாகாதீர்கள்! என சோளிங்கபுரம் ஜீவகாருண்ய சங்கத்தினர் அறிவிக்கிறார்கள்.

பொறியோர்கள் என்பவர்கள் உலக வாழ்க்கையாலும் சுயநலத்தாலும் சுற்றிக்கொள்ளப் பட்டவர்கள்.

வாலிபர்கள் என்பவர்கள் சுயநலம் இன்னதென்றே அறியாதவர்கள்.

ஈ வெ - ரா.

ஆலயங்கள் இருக்கவேண்டுமா?

தெய்வங்களின் யோக்கியதை

ராமன்.

(ஞானானந்தன்)

எனது இரண்டொரு வார்த்தை:—ஆதிதிராவிடர்களும் தாழ்த்தப்பட்டுப்போன ஏனையோரும் ஆலயம் நுழைய வேண்டுமென்று கேட்கின்றனர். ஆலயங்களிலுள்ள தெய்வங்கள் என்னப் பட்டவரின் யோக்கியதையே ஆட்சேபிக்கப் படக்கூடிய நிலைமைக்கு வந்துவிட்டபடியால் நுழைவு வேண்டும் என்னும் விவகாரத்திற்கே இடமில்லாமல் போகிறது. கோவில்களின் சொத்துக்கள் யாவற்றையும், நிலம் முதலியன இல்லாமற் செய்யப்பட்ட ஆதிதிராவிடர்களுக்கு ஒரு வழியில் பகிர்ந்து கொடுத்து அவர்களது பொருளாதார நிலைமையைச் செம்மைப்படுத்தி வைத்தால், பணம் உள்ளவருக்குச் செல்வாக்கு வருகிற இயற்கைப்படி அவர்களுக்குச் செல்வாக்கு ஏற்பட்டு அவர்களது தீண்டாமையும் ஒழிந்துவிடலாம். தேசகன்மைக்கும் கோவில்களின் செல்வம் பயன்படும். இதையொட்டியே ஒவ்வொரு தெய்வத்தைப்பற்றியும்கான் கட்டுரை எழுதி அதற்கு ஆலயம் இனி வேண்டுவதில்லை என்று ருசுபிக்கின்றேன். முதலில் ராமாவதாரத்தை ஆராய்கின்றேன்.

ராமன்.

ராமன்:—இவனைப்பற்றி ஆராயுமுன்பு இவனது தாய் தகப்பனைப் பற்றி சில வார்த்தை பகர்கின்றேன். தசரதன் பார்ப்பன போதனைப்படி தன் பெண்டாட்டி மூவரையும் அசுவமேதயாக காலத்தில் யாகம் செய்து வைத்த புரோகிதர்களுக்குக் கொடுத்தவன். ஆகவே ராமன் தாயும் அண்ணியனுக்கு கொடுக்கப்பட்டவன். அப்படியே அவனது சகோதரர்களும் தாய் மாருமென்றாயிறது. இவ்விதமான கடவுடிக்கை விவரம் 'குடி அரசில்' சக்கிரவர்த்தி ராஜகோபாலாசாரியாரால் வெளியிடப்பட்டிருக்கின்றதை வாசிப்போர் ஞாபகப்படுத்திக்

கொள்ளவும். இதைக்கேட்கும் ஐரோப்பியர் ராமன் பெற்றோரை அறிவுடையவரென்றோ வேதனும் காகரீகமுடையவரென்றோ நினைப்பாரா ? காம் தான் நினைக்கலாமா ?

தசரதன் மனு அதர்மப்படி ஆண்டவன். வருணாச்சிரம ஆபாசங்களின்படி 'நீதி' செலுத்தியவன். அவனுக்கு பார்ப்பனரல்லாதாரையும் ஆதித்திராவிடர்களையும் கருணையோடு கோக்கக் காரணம் வாய்த்ததில்லை. அவன்பார்ப்பனருக்குத் தானம் வழங்கியதையே ராமாயணத்தில் வருணித்திருக்கிறது. கம்பராமாயணத்தில் உள்ள இவ்வித வர்ணிப்பை என் ஒருவன் செவிசாய்த்துக் கேட்பான் ? உதாரணமாக, அவன் பார்ப்பனருக்கு முப்பழத்தோடும், தயிரோடும், பாலோடும் நெய்யோடும் விருந்தளித்து வந்தானென்றும் இன்னும் பல விதமாகவும் கூறியிருக்கிறது. இதைப்படிக்கும் ஆதிதிராவிடன் என்ன நினைப்பான். அக்தக் காலத்திலுள்ள தீண்டப்படாதார்னைப்பட்டவர் குத்தப் போதிய வீடுகளோடும், உண்ணப் போதிய கஞ்சியோடும் இருந்தனர் என்பது என்ன நிச்சயம் ? சுதேச அரசர்களது காலங்களிலெல்லாம் அவர்கள் பட்ட கஷ்டம் இதில் இடங்கொள்ளாது என்றால் மனுஸ்மிருதியும் வருணாச்சிரமமும் பின் பற்றியதசரதன் இவர்களைச் சமமாகவும், சரிவரவும் பார்த்திருக்கமுடியாதது இயற்கை தானே. ஆகவே, அவனுடைய பொய்ப் "புகழை" ஏன் தற்கால இந்தியர்படிக்க வேண்டும். மற்ற எல்லாப் பார்ப்பனரல்லாதாரையும் சந்தேகமில்லாமல் கொடுமையாகவே தான் அவன் கடத்தியிருப்பான்.

மூன்று பட்ட ஸ்திரீகளன்றியும், அவன் 60000 மனைவிகளை உடையவனாம். (குறைத்தது அவன் 6000 பேர் கனளயாவது மனைவியாக அடைத்திருப்பான்) அவன் அவர்களது சுயேச்சையை ஒடுக்கி அவர்களை அவர்களது சுயசம்மதத்திற்கு மாறாக அடக்கி அந்தப்புறத்தில் அடைத்து வைத்திருந்தவன். இங்கிலாந்தின் எட்டாவது ஹென்றி என்ற அரசரும், நான்காவது ஜார்ஜ் என்றவரும் ஒரு மனைவிக்கு அதிகமாகக் கொண்டிருந்தனரென்று அவர்களது தேசத்தினரே அதிருப்திகொண்டு காவல்கள் மூலமாயும் தேசசரித்திரத்திலேயும் குறைமொழி பல கூறியிருக்க, 60000 பேரை (அல்லது 6000பேரையாவது)மனைவியாக உடையவனைப்போற்றி வருவதென்றால் நம்மூன்னோர்கள் அசடர்களாய்ப் போனார்கள் என்று அது காட்டுவதன்றியும், மூன்னோர்கள் என்ப

வரும் பார்ப்பன அதர்மிகளும் கம்மையும் அச்செயலைப் போற்றவைத்து, குறையறிவு படைத்தவராய் ஆக்கி விட்டனர் என்பதையும் காட்டுகிறது. அறிவுடைய மேனாட்டாரும் எனையோரும் அவமதிக்கும் ஒரு தீய ஒழுக்கத்தைப் பார்ப் பனர் சாஸ்திர ஆதாரவும், வேத ஆதாரவும் கொடுத்துப் போற் றினால் இனி காம் மேனாட்டினால் அவமதிக்கப் படுவோம். ஆகவே தசரதன் பல மனைவிகளைக் கொண்ட விஷயத்திலும் பரவமும் கொடுமையும் செய்துள்ளவன்.

தசரதன் ஊரார் எல்லாரது வரிப்பணத்தையும் வாங்கி பார்ப்பனருக்கு மட்டும் அளித்த துரோகி. அவருக்கு அளித் தது போக மிச்சத்தைத் தன் சொந்த காரியமாகச் செலவிட் டான். எப்படியெனில் 60,000 மனைவிமாருக்கும் அணி கலன்கள் உள்பட கலியாணத்திற்கு என்ன செலவு ஆகியிருக் கும் பாருங்கள்! தான் ஒருவன் சுவர்க்கத்திற்குப் போக ஊரார் பணத்தைச் செலவிட்டு யாகங்கள் செய்தான். இன் னும் அவன் அனந்தம் பாதகங்கள் சுயேச்சை முறையில் செய் திருக்கக் கூடியவன். இதற்காக இவனைக் கொண்டாடுவதா? இவனுக்கு முன்னவர்களாகிய ரகு, அரிச்சந்திரன் முதலியோ ரும் மற்றும் பல் ஆயிரம் பேரும் இப்படியே பக்ஷபாதமாய் ஆண்டவர்கள்; 'மனு நெறி' தவறாதவர்; ஊரார் வரிப்பணத் தைத் தம்மதாகக் கொண்டு செலவிட்டவர்.

இவனது சரித்திரத்தைக் கண்டு பாடம் கற்றவராய், இவ ரது சந்ததிகளின் பல்லாயிம் பேர் நாளது வரை இவனைப் போல் செய்து வந்தனரா இல்லையா? இச்செய்தி படிப்பதால் என்ன காகரீகம் மைக்கு ஏற்படும்? இவ்வளவு பாவத்திற்கும் அவன் நாகம் செல்லவில்லை! பிர்மாலோகம் சென்று சுகமாய் இருந்தானாம். அவனது பாவத்தை சொல்கிறேன் கேளுங் கள். அவன் இறந்தவுடன் க்ஷத்திரிய ராஜ குடும்பத்திலுள்ள முறைப்படி அவனது 60000 மனைவியரும் தீக்குளித்திருப் பர். தம்மிஷ்டத்திற்கு விரோதமாய் அடைத்து வைத்துக் கொள்ளப்பட்டவருக்கு மேலும் கேர்ந்த துன்பத்தைப் பார்த் தீர்களா? இத்தப்பாவம் மன்னனைச் சேர்ந்ததாகுமா இல்லை யா? (இப்படி இந்தியாவில் உடன்கட்டை ஏறி உயிரோடு வெந்து அளிந்து மாண்ட மாதர்கள் எவ்வளவு பேர் இருக்க வேண்டும்) இப்படிப்பட்டவனுக்குப் பிறந்தானாம் ராமன். பாவத்தையே செய்தவனுக்கு ஒரு 'அவதாரம்' பிறந்தால் அது அதிக பாவம் செய்யும் அவதார காரியத்திலேயே வந்து முடி

யும் என்னுதான் நியாயமாய் கினைக்க முடியும். நாம் காரியப் போக்கைக் கவனிப்போம்.

கடவுள் அவதாரமான தனது கடவுள் தன்மைக் கேற்ப, தற்கால அகண்ட நோக்கங்களைக் கொள்ளாமலும், தன் அறிவில் அவற்றை வருவித்துக் கொள்ளாமலும், ஆனால் மூடத்தனமாய் வருணாச்சிரம ஆட்சியில்தோச்சி பெற்றுக்கொண்டும் பைசாச சட்டமியற்றிய மநுவின் நெறியை போற்றிக் கொண்டும், அச்சட்டப்படி ஆளவேண்டுமென்றும், பார்ப்பனர்களால் அடிக்கடி ராஜீய விடயங்களில் அறிவு போதிக்கப்பட வேண்டுமென்றும் எண்ணி, ராமன் பட்டத்திற்கு வரத்துணிகையில், அப்பட்டம் ராமனுக்கு சித்திக்காவிட்டால் அதைப்பற்றி பார்ப்பனல்லாத 100-க்கு 97 வீதமுள்ள அத்தனை வாயில்லாப் பூச்சிகளுக்கு ஏதேனும் கஷ்டமா? நஷ்டமா? அவர்கள் அதற்காக வருந்தியிருப்பின் அவர்களிலும் மிருகங்கள் யாவராவர்? நாமும் அவனது பட்டாபிஷேக நாள் முதலில் தவறியதைப் பற்றி அனுதாபத்தைக் கொண்டாடுவதா? இந்த மாதிரிப் பாடங்களை நாம் இன்னும் எத்தனை நாளைக்கு நற்பிக்கப் படுவது? என் இந்த இடத்தில் நான் நடுமையாய்க் கேட்க வேண்டியிருக்கிறதென்றால், இப்படிப்பட்ட மன்னரைப் பின் பற்றிப் பாடம் நறுறவர்களாய் எனைய பார்ப்பனரல்லாதார் யாவருமே அவர்களைப்போல் நாமும் தம்மாலியன்றவரை பார்ப்பனருக்கே கணக்கற்ற மடங்களும், சத்திரங்களும் கட்டி வைத்து அதுவே புண்ணியமென்றெண்ணியும் தர்ம பாடசாலைகளும், அக்கிரகாரங்களும் அவற்றிற்கு இனாம் நிலங்களும் வீடுகளும் கட்டி கோதானம், பூதானம், அன்னதானம், வஸ்திரதானம், கன்னிகாதானம, பூணூல் கல்யாணம் முதலியவைகளும் இன்னும் பல்லாயிரவிதப் புரோகித தர்மமும் செய்து வநாந்துபோனார்களே என்று எண்ணித்தான் இவ்வாறு கேட்கின்றேன். இன்றைக்கும் அப்படி நடக்கின்றனவா இல்லையா? இந்நெறி பெரும்பாலோர் பிழைக்க வழி தாராமற்போனதாயும் கடவுள் அமைக்கும் இயற்கைச் செயல் முறைக்கு மாறானதாயும் உள்ள பாவம் என்று எந்த அவதாரமாவது எந்த ரிஷியென்பவனாவது பண்டைக்கால அரண்மனைப் புரோகிதர்களாவது கூறினதில்லையே. ஷை அக்கிரமங்களோடு தெய்வங்களுக்குக் கோவில்கள் கட்டி ஏராளமாகச் சொத்து சேர்த்து வைத்துவிட்டால் மழை பெய்திடும் என்றும் நற்பித்த மூடப்போதனைக்கு நம் ஜன சமூகம் யாவரும் கட்டுண்டு போய் இன்னும் அச்செயலைக்

கைவிடாது செய்கின்றனரே; அதுவே புண்ணியமும் கன்னெ றியும் என்றுரைத்தும் பார்ப்பன மக்கள் மேலோங்கப் பலவித வழிகளை காடுகின்றனரே. இதையெல்லாம் 'ராமன்' திருத்தி ஒழுங்கு போதித்து கம் காட்டை முன்னுக்குக் கொண்டு வந்தா னாவென்று தான் கேட்கிறேன். அவன் 'கடவுள்' அவதார மாய் கம் காட்டில் உதயமானான் என்றால் அது ஒன்றாலேயே கம்மவர் எல்லாரும் கல்லறிவு பெற்று, கல்ல கல்வி கற்று காம் பிறதேயங்களை ஆண்டு ஆங்கெல்லாம் காகரீகம் கொண்டுவந் திருக்கலாமே. அப்படிக்கின்றி இப்பொழுது ஜரோப்பியர்க ளால் அல்லவா உலகில் காகரீகம் பரவத் தலைப்பட்டு 'அவதா ரங்கள்' என்பனவே இன்றைக்கு வெட்கப்பட்டு மங்கவேண் டிய நிலைமை வந்திருக்கின்றன. மேல் வரிகள் ராமனைப் பற் றிப் பொதுவான குறை வார்த்தைகன். இனி உன் ஆராய்ச்சி யைத் தொடங்குகிறேன்.

எனது கொள்கையை காட்ட சில விஷயங்களை மட்டும் ஆராய்கிறேன். சிறுவயதில் ராமன் கூனியை உண் டை வில்லால் அடித்துக் களித்தானாம். இது 'கடவுள்' என் பவரின் பாலிய திருவிளையாட்டு. அடித்தால் நோகுமென்ப தும், அதனால் கூனி ஒருத்தியாவது அவனைத் துஷ்ட னென்று கூசாமல் சொல்வாள் என்பதும் தெரிந்த கடவுள் அவதாரமான ராமனே இப்படி துஷ்ட விளையாட்டு கைக் கொண்டிருந்ததால் அக்காலத்தில் உள்ள எல்லாப் பிள்ளைக ளுக்குள்ளும் இப்படிப்பட்ட விளையாட்டு சாதாரணமானது என்றும், ராமனுக்கு இளைத்த ஆசாமியாக ஒருத்தி இப்படி அகப்பட்டிருந்தால் பல துஷ்ட பிள்ளைகளுக்கும் பலர் அகப் பட்டிருப்பர் என்றும் ஏற்படுகிறது. ஆகவே, பலர் மனவே தனையுற்றிருப்பர் என்றாயிற்று. இது பண்டைய இளைஞர் செய்கை.

கைகேயி தசரதன் சாகும் தருணத்திலும் தன்வரத்தைக் கொடுக்கச்சொல்லிக் கேட்பதில் இயல்வில்லை யென்றால், பண் டைய மாதர்களும் (வேடி பண்டைய பிள்ளைகளும் கூட) தற் காலத்துச் சில விடங்களில் உள்ளவரைப் போலவே (அப்படிக் கூட தற்போது இல்லை யென்பேன்) இருந்திருக்கவேண்டு மென்றாயிற்று. இதனால் வெட்ட வெளிச்சமாவதென்ன வெ னில், பண்டைக்காலத்தில் பூராவும் தர்ம நெறிப்படி எல்லா மனிதரும் பெண்டிரும் பிள்ளைகளும் இல்லை யென்பதும், மக்கள் குணம் எக்காலத்திலும் ஒரே இயற்கையை உடையது

என்பதும் ஆயிற்றன்றே. மகனை உடையவள் உடன் கட்டை யேறவேண்டிய அவசியமில்லை யென்பது அக்காலச் சட்டத் திலுண்டு. ஆகவே இந்த கைகேயிக்குப் பரதன் இல்லா விடில், அவள் (புருஷனைத்தன் கண் பார்க்க உரிமையுடு கொல் லுகிறவள்) முழுமனதோடு உடன் கட்டை ஏறியிருப்பாளா என்று யோசித்துப் பாருங்கள். ராமன் குடிகளுக்குப் பொறுப்புக்கொண்டு அரசுசெலுத்தும் கொள்கையைக் கடைப் பிடிக்க வேண்டியவனாய் இருக்க, அவன் தன் தகப்பன் சொல் (ராஜாங்க காரியத்தில்) முக்கியமென்றுரைத்துக் காட்டுக்குப் போனான். இதனால் அவன் குடிகளது சம்மதம் கொண்ட தாக ஏற்படுகிறதா? அவனது தகப்பனாவது ராஜாங்கசம்பந்த மான வரத்தைக் குடிகளைக் கேட்காமல் எவ்விதம் அளிக்க லாம்? இதெல்லாம் அக்கால ஜனங்களின் கேடுகெட்ட நிலை மையை ஞாபக மூட்டுகின்றது. இவன் காட்டுக்குச் சென்ற வரலாற்றைத் தொடருமுன் இவனது கடவுள் தன்மைக்குச் சான்றாய்க் கூறப்படும் அகல்லை சாப விமோசனத்தைக் காண் போம்.

கௌதமர் அகல்லைக்கு சாபம் தரும்போதே 'ராமனது பாதம் பட்டால் நீ கல் நிலையினின்றும் மாறுவாய்' என்று உரைத்திருந்தார். ஆகையினால் அவரது வாக்குப்படி இவன் கால்பட அகல்லை எழுலாயிற்றேயன்றி இவன்தானாக எழுப்ப எண்ணி எழுவைத்தனன் என்பது கடைபெறாததாகும். கௌதமர் வேறு யார் கால்பட்டும் எழுந்திருக்கலாமென்று உரைத்திருப்பினும் அவ்விதமேயாகி யிருக்கும். கௌதமர் ராமனை சிறப்பித்தால, காம் கமக்கு ஒரு அனுகூலமும் ஒரு வகை கண் திறப்பும் செய்யாதவனை, ஆனால் ஒவ்வொரு பிரதிகூலத்திற்கும், கேவலத்திற்கும், வருணாச்சிரமத்திற் கும் மனுஸ்மிருதிக்கும், தகப்பன ஆண்டவழிகளுக்கும் அவன் இணங்கி வந்திருக்கையில், அவனை ஏன் கொண்டாடுவ தென்று கேட்கிறேன்.

அவனது கடவுள் தன்மையை மேலும் சோதிப்போம். ராமனை முன்னிலையில் வைத்துக் கொண்டு சதானந்த ரிஷி விஸ்வாமித்திரனின் பாலாறு கூறுகையில், விஸ்வாமித்திரன தன் மக்கள் மாரில் எவரேனும் தனது சகோதரி மகனுக்குப் பதிலாக நரபலியாவதின் நிமித்தம் ஒரு யாகத்திற்குச் செல்ல ஆக்ஞாபித்ததாகவும், அது காலை அம்மக்களில் ஒருவரும் கீழ்ப்படியாததற்காக அவர் சபித்ததாகவும் சொல்லிக்கொண்டு

வருகிறபொழுது, அது கேட்ட ராமன் ரபலி பிசகென்றும், எந்த அரசனெனப்பட்டவனும் ரபலியைச்செய்யக்கூடாதென்றும் சொன்னதுண்டா? அப்படி ஒரு யாகம் செய்பவன் சிவன் விஷ்ணு, பிர்மா முதலியவர்களை யாகசாலைக்குக் கூப்பிட்டு அங்கு அளிக்கும் உணவைப் பெற்றுக் கொள்ளச் சொல்லி வேண்டுகையில், அம்மூர்த்திகள் அவ்விதம் பெறவருதல் அவர்களது மதிப்பிற்கும், நியாயத்திற்கும் நீதிக்கும்தவறாகும் என்று ராமன் தனது அபிப்பிராய வார்த்தை பகர்ந்தானா? இல்லவே இல்லை. மௌனமாய் இருந்து விட்ட ராமனின் கடத்தையால் உலகம் என்ன பாடம் கற்கும்! ராமனே எல்லா யாகங்களையும் வேதத்திற் சொல்லப்பட்டதாகவும், வேதம் கடவுள் சொன்னதாகவும், தான் அவற்றின்படியே நடக்க வேண்டுமென்றும் எண்ணியிருக்கையில் அவன் எப்படி ஆட்சேபம் செய்வான? விஷ்ணுவுக்கும் சிவனுக்குமே இந்த யாகங்களில் மனமிருச்கையில் இவற்றை நிலை காட்டவே, விஷ்ணு தானே ராமனாய் அவதரித்திருக்கையில்; அதற்குத் தகுந்த புத்தி தானே ராமனுக்கு வாய்த்திருக்கும். ஷை மும்மூர்த்திகளின் கடத்தையும் ராமன் செயலும் அரு வருப்பு கொடுக்கின்றதா இல்லையா? அதை நாம் இகழ்வதா கூடாதா என்று கேட்கிறேன். மேல்நாட்டு வெள்ளைக்காரர் ராமாயண சம்பந்தமான ஷை 'தெய்வ'ச் செயல்களைப் பக்தியுடன் செவிசாய்த்துக் கேட்டுப் புகழ்ந்துவந்த - புகிழ்கின்ற ஹிந்துக்களை எப்படி மதிப்பர்?

இனி ரபலியிட்ட அரசன் செயலைச் சற்று கவனியுங்கள்.

ரபலியாகத்தை நான் ஆராயுமுன் இங்கு விஸ்வாமித்திரனின் ஒரு "யோக்கிய தாம்சத்தை"யும் அவனது முழுமூடத்தனத்தையும் ஒரு சிறிது பாருங்கள். விஸ்வாமித்திரன் தன் சகோதரி மகனுக்காகத் தன் மகனை ரபலி யாகத்திற்குச் சென்று பலியாகி விடச் சொன்னான். இப்படி, ரபலி யாகங்களில் ஒரு 'ரிஷி' யென்பவனுக்கே பெரும்பற்றும், யாகத்தில் எத்தனை உயிரோயாயினும் எச்சமயத்தும் செலவிடுதல் கல்ல காரியம் என்னும் அபிப்பிராயமும் ஏற்பட்டிருக்கையில் மற்ற அக்கால வருணாச்சிரமபாவிகளுக்காவது, மன்னர்களுக்காவது அதை அடிக்கடி செய்வதில் எப்படி ஆவல் குறையும்? ஆகவே பார்ப்பனரும் பார்ப்பன மந்திரிகளும இப்படிப்பட்ட 'ரிஷி'களும் ஷை வேள்விகள் செய்து 'பரமேஸ்வரனை திருப்தி செய்து' வந்திருக்க வேண்டியது சர்வசாதாரணமான விஷய

மன்றோ? இந்த விஸ்வாமித்திரன் ஒரு 'ரிஷி'யாம். இவன் பற்றற்றவனாம். அக்காலச் சாமியார்களும், சங்கியாசிகளும் இப்படியிருந்தால் எவ்வளவு உயிர்க்கொலைகள் நிகழ்ந்திருக்க வேண்டும்! நம் திருவள்ளுவர் கொள்கைக்கும் இவனதும்—இவனைப்போன்ற அக்கொடூர அயோக்கியர்களது கொள்கைக்கும் வித்தியாசம் கண்டீர்களா? நம் ஐண்டிஸ் கட்சியிலுள்ள ஒரு சாதாரண இளைஞருக்கு இருக்கக்கூடிய அவ்வளவு பொது அறிவேனும் அக்காலத்திய பல 'ரிஷிகள்' என்பவருக்கில்லை யென்றாயிற்று. ஆனால்வேள்விப் பலிக்கெனக்கொண்டு போகப்பட்டவர்களோ அலறிக்கொண்டு தான் செல்வர்! வேள்வி மன்னன் அவர்களைப் பிணித்துக் கட்டிக்கொண்டே கினான். இப்படிப்பட்ட 'தர்மங்களை, ஒவ்வொரு யுகமும் நிலை நாட்ட 'அவதாரம்' செய்த 'பரப்பிரமம்' இவை ஒழுங்காக நடப்பதைக் கண்டு சிந்தையிற் துயரம் தீங்கினவனாய் மேலும்கதை கேட்கிறான். இச்சரித்திரத்தை அவன் 'ஆபிக் கதைகளை' வாயை மூடிக்கொண்டு கேட்கவேண்டியதைப் போல ஜண்ணி விட்டனனன்றே!

விஸ்வாமித்திரன் சகோதரி மகனுக்கு ஒரு மந்திரம் சொல் வித்ததன் பயனாய் அவன் யாகத்தில் வெட்டப்படப்போ கும் தருணத்தில் அயோக்கிய-மனுஷக் கறிதின்கிற-'தெய்வங்க ளான' சிவனும், விஷ்ணுவும், பிர்மனும் வந்து விட்டனர். (அவமானம்) அம்மந்திரம் இலலாவிடில் இவர்கட்கு அவனது யாகக்கறி உணவு கிடைத்திருக்கும். இங்கு வேண்டியதென் னெனில், இந்த விஸ்வாமித்திரன் முதலிலேயே ஏன் அப்படி மந்திரம் சொல்லி வைத்து அவனையாவது, தனது மகனையா வது அனுப்பியிருக்கூடாது? ஏன் அவனது மக்கள் யாவரும் வேடராகிவிட வேண்டி அநாவசியமாய் சபிக்க வேண்டும்? அவர்களைஏன் முதலில் போகிறீர்களாவென்று கேட்க வேண் டும்? தான் பெற்றபிள்ளைகளை ஏன் அனாவசியமாய்க் கெடுத் திட்டான்? இதனால் அவனை நான் முழுமூடனென்றால் அதை எந்த அறிவுடையவரேனும் தவறென்பரோ? வாசிப்ப வர்களே கேளுங்கள்! கொடுமை! பொல்லாக்கொடுமை!! இப்படிப்பட்டவனே ராமனுக்குக் குருவாய் ஆனான்! ஆகவே அவன் போதித்த போதனைகள் என்னவாயிருக்க வேண்டு மென்று இதிலிருந்து நீங்கள் நினைத்துக் கொள்ளலாமல் லவா? அக்கால பல 'ரிஷி'களது அக்கிரமப்போதனைகளும் அவற்றின்படி நடந்த அக்கிரம அரசர்களது கொடுமையும் ஒருபுறமிருக்க, கேள்விகளுக்கென்று தம் பிள்ளைகளை விற்ற

பற்பல பெற்றோர்களது கயமைக் குணத்தையும் சற்றே எண்ணிப்பாருங்கள். ராமன் ஆண்ட 11,000 ஆண்டுகளில் ஒரு நிமிஷமேனும் அவன் இம்முறைகளின் அநியாயத்தை யொழிக்க எண்ணியதில்லை. இம்முறைகள் ஷே வேள்வி கடத்திய அம்பரீஷன் காலத்திற்கு முன்னரே நூதற்கொண்டு கடந்து வந்தும், ராமனுக்குப் பின்னரும் ஆங்காங்கு கடந்தும், இப்படியாக புத்த அவதார காலம் வரைக்கும் நடந்து வந்தனவாமன்றே? இப்போக்கைத் தடுக்கவேண்டுமென ராமன் தன் காலத்தில் ஒரு நிமிஷமாவது செலவிட்டு, அக்கால அரசர்களுக்கு போதித்திட எண்ணவில்லைஎன்பது கண்கு விளங்குகிறது. அவன் இன்னும் கொள்ளைப் பாடங்களும், கொள்ளைக் கொடுமைகளும் காட்டவல்லவன் என்பதை கான் மேன்மேலும் காட்டிக்கொண்டே போகப் போகிறேன். ஆதலால் இதையே பெரிது செய்யாமல் மேல் செல்லுகிறேன். அவன் வசிட்டரால் கற்றுக் கொள்ளலாய பாடங்கள் இன்னும் கொடியவென்பதை இங்கு குறிப்பாக உரைத்திடுவேன். யாக சம்பந்தாய் விஸ்வாமித்திரனைப்போல பாவபோதனைகள் செய்த ரிஷிகள் பலருளர். 100-க்கு 90-பேர் அப்படியே இருந்தனர் என்பேன். வழி வழியடியான ரிஷிகள் போக, சமீபகாலத்தியவரைக்கொண்டே உதாரணம் காட்டுகிறேன்.

திருஞானசம்பந்தர் "வேதவேள்வியை இந்தனை செய்தமுல் ஆதமில்லி" என்றும், "பசு வேட்டெரி யோம்பும் சிறப்பர் வாழ்தில்லை" யென்றும் இப்படிப்பல விடங்களில் பாடினார். "மறைவழுக்கமில்லாத மாபாவிகள்" என்றும், "வைதிகத்தி னெறி யொழுகாத அக் கைதவத்தர்" என்றும் இப்படியாகப் பல விடங்களில் பாடியுள்ளார். மற்ற நாயனாரும் இப்படியே அகேகம் பாடியுள்ளனர். ஆழ்வாராதிரும் இப்படியே அகேகம் பாடியுள்ளார்; இன்றைக்கு இப்படிப்பட்ட போதனை மறைந்து விட்டது. 'பசு' என்றால் நர் உயிர் முதல் சகல உயிர்களுக்கும் பரிபாஷை போல் பார்ப்பனரால் உபயோகப்படுத்தப் படுவதால் திருஞான சம்பந்தர் அப்பதத்தைப் பிரயோகித்திருக்கிறார். நாம் ஷே யாக முறைகளைக் கூடாதென்பதால் நாம் அவரது வாக்கியப்படி 'பாவி'களும் 'கைதவத்தர்'களும் ஆயினோம். இன்னும் கூத்தென்னவென்றால், எல்லா வேள்விகளும் 'மறைவழுக்கம்' ஆகவும் 'வேதவேள்வி' ஆகவும் உள்ளனவாயிருக்க, நாம அவற்றைக் கண்டிருக்கிறோமேம; நாம் 'பாவிகள்' தானே? இந்தத் திருஞானசம்பந்தனாவது அல்லது எந்த ஆழ்வாராவது வேதத்

திற், பௌண்ட்ரீகயாகம் செய்முறையைக் கூறும் பாகத்தையா வது, அல்லது, கொழுப்பெடுத்த அஸ்வமேதங்களையாவது சுயநலமாய் ஊரார் பணத்தைக்கொண்டு 'பசு'க்கள் கொன்று யாகம் செய்தலையாவது ஆமை, பாம்பு, ஆடு மாடு இவற்றைக் கொன்று யாகம் செய்தலையாவது பார்ப்பானுக்கு கூட்டிக் கொடுக்க நேர்கின்ற யாகங்களையாவது செய்யவே கூடா தென்று குறிப்பிட்டுச் சொன்னதுண்டா? இவையும் இவற் றைப்போல ஒரு கோடி ஆபாசமும் இல்லாவிடில் 4 வேதம் வது? இவற்றைக் கழித்தால் வேதம் போய் 'மறை வழக்கம்' 'வைதீகம்' ஆகியவை கெடாதா? அன்றியும் பாருங்கள். அஸ் வமேதயாகம முதலியவை செய்து 'தேவதைகளைத் திருப்தி செய்ய' கம்மால் முடியாவிடினும், கேவலமாக, கும்பகோணப் பார்ப்பனரைப்போல் ஒருவர் பௌண்ட்ரீகயாகமாவது நடத்தி எல்லாத் தேவரையும் திருப்தி செய்யக்கூடாதா? ஏனெனில் அந்த யாகத்தில் பார்ப்பனச் சபை நடுவில் பார்ப்பாரத் தடிய னும், பார்ப்பாரத்தடிச்சியும் வெட்கம் மறந்து 'பத்தியாய்' புண ர்ச்சி செய்கையில், வெ திருஞானசம்பந்தர் முதலிய 'வேத வேள்வி' சயனார்களும் 'தேவகாரியம் செய்து வேதம் பயி ன்றுவாழ்கின்ற ஆழ்வார் கூட்டத்தினரும் அருகில் நின்றுதா னும் 'பத்தியாய்' வேடிக்கை பார்ப்பார்கள் என்று தான் சொல் லுகிறேன்.

எவரேனும் வேதத்தில் உபனிஷத்பாகம் உளதென்ப தால், அப்பாகமுள்ள பாகங்களை யெல்லாம் இன்றே கொளு த்தி விட்டாலும் கூட, பிரம்ம ஞானிகள் மூலமாயும் (திருவள் ளுவர்-ராமகிருஷ்ணர்-விவேகானந்தர் முதலியோர் போன்றார் மூலமாய்) என்றும் தெரிந்து கொள்ளலாம். ஞானிகள் உள்ள வரைக்கும் ஞானபாகத்திற்கு எக்காலும் அழிவில்லை யாத லால், எனையபாகங்களையும் சேர்த்தும் பெரிது செய்து பாடி, வெ பெரியார் என்ற ஆசாமிகள் எல்லா ஜனங்களையும் மூடர் களாகப் பல வழியாலும் ஆக்கிவைத்திட்டதால் தான் வெ யார்கள் கண்டிக்கப்படுகிறார்கள். அக்கால விஸ்வாமித்திரனி டம் ராமன் பாடம் கற்று அமுல் கடத்தியதுபோல, மேற் கண்ட ஆசாமிகளிடமும் எல்லாரும் பாடம் கற்றதால், காம் இப்படிப்பட்ட 'ஞானிகளை'த் தொலை தூரத்தில் விட்டு விட்டு அவர்களின் அற்ப அறிவுக்கும் கேவல ஆராய்ச்சிக்கும் காம் பெரிதும் இரங்கத்தான் வேண்டும் என்பதற்கு இன்னும் ஒரு உதாரணம் மட்டும் காட்டி விடுகிறேன்.

திருஞான சம்பந்தன், "கற்றாங்கெரியோம்பிக்கலியை வராமே செற்றார் வாழ்தில்லை..." என்று கூறுவதையும் அப்பர் "...நிலமலி கெய்த்தானத்தோ டெத்தானத்தும் நிலவு பெறுங்கோயில் பல கண்டல்ல் தொண்டீர், கலிவலி மிக்கோனைக் காலால் செற்ற கைலாய நாதனையே காணலா மே" என்று பாடுவதையும், கம்மாழ்வார், "கலியுகமொன்று மின்றிக்கே தன்னடியார்க்கருள் செய்யும்..." என்று உரைப் பதையும், இப்படியாகப் பலவிடங்களில் பாடியிருக்கிற இந்த ஞான திருஷ்டிக்கார ஆசாமிகளுக்கெல்லாம் கம்கலி யுகமானது பொல்லாத யுகமாய் தோற்றம் போலும். இந்த 'ஞானிகளைப்' போலவே பார்ப்பார முனிக ளும் இப்படியே கம் கலியுகத்தைப்பற்றி கருங்கி, இழித் துக்கூறி தமது 'ஞானதிருஷ்டி' வல்லமையை கமக்குக் காட்டி யிருக்கின்றனர்.

நூற்றுக்கணக்காகச் சத்திரம் கட்டிப் பார்ப்பாருக்கே எல்லா வழியாலும் உபசாரணை செய்துவிட்டு, ஏழைப் பட் டினி போட்ட அக்காலம் போல் இக்காலம் இல்லையென்றும், ஆதலால் கலியுகம் பொல்லாதது என்றும் அவர்கள் அறி வின்றி மூடகம்பிக்கை கொண்டிட்டனர்! இக்காலம் தான் நியாயம் என்பது எப்படிப்பட்டதென்று புலப்பட்டிருக்கிற தென்றும், சகல மனிதரும் சமத்தும் என்றும், எவர் வேண்டு மாயினும் (ஐரோப்பியர் அமெரிக்கர் ஏனையோர் உள்பட) யோகம் செய்து பிர்ம ஞான நிலையடையலாமென்றும், அத ற்கு ஷை வேள்விகளும் அவற்றை விழைந்த தெய்வங்களும் இடையில் வேண்டாமென்றும் அறியக் கிடக்கிறது. இப் போதுதானே, ஷையார் தம் அபூர்வ கொள்கைகளைப் பரப் பிய காட்டைவிட எவ்வளவோ நூறுபங்கு பூபாகம் உள்ளது என்று தெரியலாகி, சகல வித க்ஷேமமும் 1-க்கு 4-பங்கான விவசாய அபிவிர்த்தி மார்க்கமும், கல்வியும், ஆராய்ச்சியும், சுயமரியாதையும், பலநூறு நூதன சௌகரியங்களும் பிற மத கட்புக்கொள்கையும், அறிவு விசாலமும் இன்னும் பலவும் ஏற் படலாயிற்று. இது விரிக்கிற் பெருகும். இவ்வளவு எல்லைக்கு தான் வளர்த்தியதேனெனில், பண்டைக்கால ரிஷிகளிடம் பாடம் கற்றுக் 'கடவுள் அவதாரமான' ராமன் ஏமாந்ததைப் போல, சமீப காலத்திய சைவ வைணவ 'முனி'க் கணத்தினரி டம் நாம் பல பாடங்களைக் கற்று ஏமாறக்கூடாதென்று காட் டவும், ஷை சாதாரண (ஞானதிருஷ்டி) அறிவு, ஆராய்ச்சி, யூகம் கூட சிறிதும் இல்லாதவாது மற்றைய பல ஆபாச உரை

களையும்,—தேசத்தைப் பாழ் செய்யக்கூடிய உரைகளையும்-சுயமரியாதைக்காகாத உரைகளையும்—பார்ப்பார்ரையே ஓயாது புகழ்ந்த உரைகளையும் காம் ஒருக்ஷணமும் பின் பற்றினால் காம் விருத்தியாகிறகாலமாகாது என்றும் காட்டவுமே. (ஷை ஆழ்வார்கள்—காயனார்கள் பிரபந்தங்கள்—தேவாரப்பாடல் கள், பெரிய புராணம் இவற்றை யெல்லாம் ஆபாச அகாகரீகம் புனைதத்த இடங்கு என ரூபித்து எவரும் சிரிக்கச் சிரிக்க, கனிப்பட கான் கட்டுரை யெழுதி எடுத்துக் காட்டுவேன்) பண் டையரிஷிகளும் ஷைபெரியார்களும் தற்காலமிருக்க கேர்ந்தால் கம்தற்கால சுயமரியாதைப் போக்கையே கன்றென்பர் என வும்கூறுவேன். "வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்" என்று பாடிப்பாடி இன்னும் இன்புறும் கணத்தைப் பற்றி எனக்கு லட்சியமில்லை.

ராமனை விட்டு விலகி இன்னும் ஒரு வரியும் எழுத வேண்டியேற்படுவதற்கு வருந்துகிறேன். பலர் 'தெய்வங்களை யும்' 'அவதாரங்களையும்' குற்றத்திற்குட்படுத்திக் கூறக்கூடா தென்றும், ஷை ரிஷி வர்க்கமும் பயமுறுத்தியுள்ளதன்றியும் ஷை சமீபகாலத்த 'பெரியவர்'களும், யமன் உளன் என்று தம் பதிகங்களிலெல்லாம் சொல்லமுற்படுவதையும் காட்டுகிறார்கள். கான் ஒரு உதாரணம மட்டும் காட்டுகிறேன்:—"..... தடுத் தாட்டித் தருமனார் தமர் செக்கிலிடும்போது தடுத்தாட் கொள்வான்....." என்று சுந்தர மூர்த்தி காயனார் என்பவர் சில அசட்டுவார்த்தைப் பாட்டுகள் பாடுகிறார். இதற்காகவே யமன் இப்பொழுது இல்லையென்று எடுத்துக்காட்டி விட்டு கான் பயப்படுபவரைத் தைரியப்படுத்தி மேற்செல்ல வேண்டிய தாக விருக்கிறது.

பாகவதத்தில் கூறப்பட்டதாயுள்ள இயமனைப் பற்றிய ஒரு கதை:- இயமன் நீதி தீர்ப்புச் செய்கையில் அவனது தலைக்கு மேல் ஒரு மயிர்க்காம்பில் கட்டித் தொங்கவிட்டுள்ள ஒரு மலையுள்ளது. அதன் கீழ் அவன் உட்கார்ந்து விசாரிக் கும் ஆசனமும், அவ்வாசனத்தின் கீழ் ஒரு அக்கினி ஆறும் ஓடுகிறது. எமன் நியாயம் தவறினால், ஷை மலை அறுந்து விழுகது அவன் தீயில் அழுங்கி ஒழிவான். இப்படியிருக்க ஒரு கால் அவன். ரிஷி ஒருவரைக் கழுவேற்றி விட்டான். அவர் காரணம் கேட்டபோது, அவன் அவர் சிறு வயதில், பறக்கும் பூச்சிகளைப் பிடித்து ஊசியால் குத்தினார் என்றான். இதைக்கேட்ட ரிஷி, கான் இளம் வய

தில் செய்த பாவத்திற்குப் பெற்றோர் அல்லவா ஜவாப்தாரி யென்று கூறி யமனை மனிதனாய்ப் பிறக்கச் சபித்தார்.

வாசிப்பவர்களே, இந்த ரிஷியானவர் தான் தவசி என்ற தன்மையினால், யமனுக்குச் சாபம் கொடுத்திட்டார். ஆனால் அவனது தலைக்குமேல் உள்ள கல் மலையானது அவன் அநியாயத்தைச் செய்கையில் ஏன் அவனை அக்கினியாற்றில் தள்ளிப் புதைக்கவில்லை? இந்த ரிஷியை அக்கிரமதண்டனை செய்தது போல் சாதாரண ஜனங்களையெல்லாம் அவன் தவறியே தண்டித்திருந்திருப்பானே. அப்பொழுது அந்தப் பாவம் போன வழி எது? மேலும் ஆராய்வோம்; தொங்கிய அம்மலை அவனது தலைக்கு மேல் விசித்திரமாய் தொங்கிக் கொண்டே தானே சும்மாவிருக்கும். அதற்கு மனமும் கண்ணும் இருந்தால் தானே அது சமயம்பார்த்து அறுந்து விழும் அப்படியெல்லாம் இருப்பதாகச் சொல்லவில்லையே.

இனிமேல் ஒரு வேடிக்கையை கேளுங்கள். எமன் செக்கிலிட்டு ஆட்டுவான் என சுந்தாமூர்த்தி நாயனார் என்ற ஆசாமி தான் பயப்படுவதாகக் கூறிப்பாடி எல்லாரையும் ஓட்டாக்கினானே. யமனும் எமலோகத்திலுள்ள வேலைக்காரர்களும் இப்பொழுது எப்படியிருக்கின்றனர் தெரியுமா? இந்தியாவில்—பொதுவாய் ஐரோப்பிய உலகில் பாவம் குறைந்து வருவதால் யமலோகத்தில் எத்தனையோ 'செக்கு'களும் குத்தாயுதங்களும் வெட்டாயுதங்களும் உபயோகமற்றுப் போய்ச் சும்மா கிடக்கும். செக்குகள் யாவும் வேலையின்றிக் கெட்டுப்போய்க் கிடப்பதன்றியும் எமலோகத்தில் 1 கோடி வேலையாட்கள் வேலையில்லாமல் எங்குபட்டு வருகின்றனர். மேலும் அவர்களும் எமனும் நம் கவர்ன்மெண்ட் விதிக்கும்தண்டனை மார்க்கங்கள் இலகுவானதாயும், காகரீகமானதாயும், நீதியானதாயும் அறிவுபொருந்தியும் இருப்பதைக் கண்டு வெட்கி, பாடம் கற்றவராய், செக்கு முதலியவற்றை ஒழித்து விட எண்ணியுள்ளனர். அல்லது தாம் இதுவரை செய்து வந்த பாவங்களுக்காகத் தவம் செய்து அவற்றை ஒழித்துக்கொள்ள எண்ணி, வேலையை விட்டுப் போகப்போகின்றனர் என்பேன். ஒருக்கால் எமன் சிவனிடம் ராஜிகாமா தந்திருப்பான். அன்றியும் அவனும் அவனது வர்க்கமும் ருஷியாவிலுள்ள தண்டனை முறைகளைக்கற்று வரவாவது போயிருப்பார். எமன் நம் சுயமரியாதை உணர்ச்சியைக் கண்டு திடுக்கிட்டுப் போய், சாதி பிரித்துப் படைத்த பிர்மனையும், ஒழுங்கான சமத்துவ நீதி

பார்வதிக்கும், பரமசிவனுக்கும் சம்பாஷணை.

சித்திரபுத்திரன் எழுதுவது.

பார்வதி:—எனது பிராணநாதனாகிய ஓ சிவபெருமானே! ஆகாயத்தில் பறக்கின்ற கருடன் என்கின்ற பட்சியைப் பார்த்து பலர் காலையிலும், மாலையிலும் கண்ணுக்கண்ணமாய் போட்டுக் கொள்ளுகிறார்களே அது எதற்காக நாதா?

பரமசிவன்:— கண்மணி! இது உனக்குத் தெரியாதா? கருடன் எமது அடிமையாகிய மகாவிஷ்ணுவுக்கு வாகனமல்லவா? அதனால் விஷ்ணு பக்தர்களில் சிலர் கருடனைக் கண்டால் கண்ணத்திலடித்துக் கொள்ளுகிறார்கள்.

பார்வதி:—ஓ ஹோ, அப்படியா சங்கதி! சரி, அப்படியானால் எமது அடிமை வாகனத்திற்கு இவ்வளவு மதிப்பு இருக்கும்

காட்டாத அவதார விஷ்ணுவையும், அக்கிரமங்களை வேடிக்கை பார்த்து நேற்றுவரைக்கும் கழித்த சிவனையும் தூற்றிக் கோபித்து விட்டு எங்கேனும் போயிருப்பான். இப்படியெல்லாம் அவன் செய்தில்லாவிடில், பரசுராமன் என்ற ஒரு விஷ்ணுவை ராமன் என்ற இன்னொரு விஷ்ணு ஒடுக்கியதுபோல அவனைச் சிவன் ஒதுக்கியிருக்க வேண்டும்: சிவன் இப்படிச் செய்து தானும் திருந்தியில்லாவிடில், காசிம்மனைச் சாபம் கிழித்ததுபோல பிரம்மமானது மேற்படி சிவனைக் கிழித்தெரியவோ, ஒதுக்கவோ, தண்டிக்கவோ கூசாது என்பேன். பின்னர் எப்படித்தான் மேற்படி தெய்வக்கார ஆசாமிகளின் கொடுமைகளுக்குத் தண்டனையும் கர்மநிதியும் வாய்ப்பது? ஆகவே, சுயசுயமரியாதை நெறியினின்றும் நம்மைப் பிரித்து எமாற்றிய அயோக்கியப்பாவிகள் யாவராயிருப்பினும் நாம் ஏன் பயப்படவேண்டும்?

இனி ராமனையே தடையின்றித் தொடர்வேன்.

போது நம்முடைய வாகனமாகிய காளை மாட்டைக் கண்டால் ஏன் யாரும் கண்ணத்திலடித்துக் கொல்வதில்லை? அன்றியும் வண்டியில் கட்டி ஓட்டுகிறார்கள், ஓடை அடிக்கிறார்கள், செக்கில் கட்டி ஓட்டுகிறார்கள், அடித்துக்கூட தின்று விடுகிறார்களே அது ஏன்?

பரமசிவம்:—நம்முடைய பக்தர்களுக்கு அவ்வளவு பக்தி இல்லை. கன்றாகச் சாம்பலை பூசிக்கொள்ளத்தான் தெரியும். நமது வாகனத்தினிடத்தில் பக்தி காட்டத் தெரியாது.

பார்வதி:—அதுதான் போகட்டும், நமது குமாரனாகிய கணபதியின் வாகனமாகிய பெருச்சாளியைக் கண்டால் ஏன் கன்னங்கன்னமாய் அடித்துக்கொள்ளாமல் தடி எடுத்து அடித்துக் கொன்று விடுகிறார்கள்? அய்யோ பாவம்!

பரமசிவன்:—கணபதியின் பக்தர்களுக்கும் போதுமான பக்தி கிடையாது. எனென்றால் கணபதிக்கு அபிஷேகம் செய்யும்போது அவனது வாகனமாகிய கல்லுப் பெருச்சாளிக்கும் அபிஷேகம் செய்வார்கள்; அதற்கும் பால், நெய், தயிர் வைத்து கொழுக்கட்டையை வைப்பார்கள்; உயிருடன் காணும்போது ஓடி ஓடி அடிப்பார்கள். நம் பக்தர்கள் யோக்கியதையே இப்படித்தானே! இந்த வெட்கக்கேட்டை யாருடன் சொல்லுவது!

பார்வதி:—அதுதான் போகட்டும், தங்களுடைய மற்றொரு வாகனமாகிய நாயைக் கண்டால் ஒருவரும் கன்னத்தில் அடித்துக் கொள்ளாமல் எல்லோரும் சோடு! சோடு! என்று விரட்டுகின்றார்களே அது என்ன காரணம் நாதா?

பரமசிவன்:—கண்மணி அதுவும் பக்தர்களின் அறியாத்தனம்தான். ஆனாலும் அது மலம் சாப்பிடுகின்றதல்லவா? அதனால அதன் மீது சிலர் அசுப்படுகின்றார்கள் போல் இருக்கின்றது.

பார்வதி:— என்ன நாதா, ஜகத்குக் கடவுள் வாகனம் மலம் சாப்பிட்டால் மகாவிஷ்ணுவின் வாகனம் அதிலுள்ள பூச்சி, புழு, நத்தை, நண்டு முதலிய அசுத்தமான வஸ்துக்களை யெல்லாம் சாப்பிடுகின்றதே! அதையெல்லாம் அந்த பக்தர்கள் மன்னிக்கும்போது மலம் சாப்பிடுவதை மாத்திரம் ஏன் நமது பக்தர்கள் மன்னிக்கக்கூடாது?

அது தான போகட்டும்; கமது குமாரன் வாகனமாகிய மயிலைக்கண்டால் என் முருக பக்தர்கள் கன்னங்கன்னமாய் போட்டுக் கொள்ளுவதில்லை? அன்றியும் ஆட்டைக்கண்டால் அடித்துத் தின்று விடுகிறார்களே! அவன் கொடியாகிய சேவலைக் கண்டால் அறுத்துத் தின்றுவிடுகிறார்கள்! இது என்ன அகியாயம்!

பரமசிவன்:—அது அந்த பக்தர்களின் பக்திக்குறைவு. அதற்கு நாம் என்ன செய்யலாம்.

பார்வதி:— நாதா! சரி, சரி இதையெல்லாம் பார்க்கும் போதுதான் எனக்கு மிகவும் வெட்கக் கேடாயிருக்கின்றது. கமக்குக் கீழ்பட்ட விஷ்ணுவின் வாகனத்திற்கு மாத்திரம் உலகத்தில் இவ்வளவு கௌரவமும், அவர் பக்தர்களுக்குமாத்திரம் இவ்வளவு பக்தியும் இருப்பதும், கமது வாகனங்களுக்கு இவ்வளவு மரியாதைக்குறைவும் மத பக்தர்களுக்கு இவ்வளவு பக்திக் குறையும் இருப்பதும் எனக்கு வெளியில் தலை கீட்ட முடியவில்லையே. தவிர விஷ்ணுவின் பெண்ஜாதியான மகாலக்ஷ்மி கூட இதனாலேயே அடிக்கடி என்னைப் பார்த்து பரிகாசம் பண்ணுகின்றாள். இதுதவிர கம்முடைய பக்தர்களிலும் பலர் அறிவில்லாமல் கம்ம வாகனத்தை மரியாதை செய்யாமல் இருப்பதோடல்லாமல் விஷ்ணு வாகனத்திற்குவிஷ்ணு பக்தர்களைப் போலவே கன்னங்கன்னமாய் போட்டுக்கொண்டு மரியாதை செய்கிறார்களே! இது என்ன மானக்கேடு! தாங்களே யோசித்தபபாருங்கள.

பரமசிவன்:—என்ன செய்யலாம் சகி? தலையில் பிரம்மன் இப்படி அவமானப்படும்படியாக விதித்து விட்டான். விதியாரை விட்டது சொல்பார்ப்போம். என் கண்மணி! நீ இதற்காக அழவேண்டாம்; உன்னைப்பார்த்தால் எனக்கும் அழுகை வருகிறது.

பார்வதி:— சரி, சரி. இதற்காக நான் ஒருத்தி அழுவது போதாதாசக்கும். இனி நீங்கள் வேறு அழுகவேண்டும்! போனால் போகட்டும், இம்மாதிரி கம் தலைமேல் எழுதிய அந்த பிரம்மாவை பேசிக்கொள்ளலாம். வாருங்கள் கம்ம வேலையைப் பார்க்க நாம் போவோம்.

சொர்க்கமாவது! நரகமாவது!

(சாமி சிதம்பரனார்.)

பசித்துன்பத்தால் வருந்தும் மக்களே! உங்களுக்கு இப் பொழுது அரை வயிற்றுக் கஞ்சி வேண்டுமா? இன்னும் பத்து காட்கள் கழித்து கல்ல விருந்து சாப்பாடு வேண்டுமா? என்று கேட்டால் அவர்கள் என்ன சொல்லுவார்கள்? "பத்து காட் கள் கழித்து விருந்து கிடைப்பது இருக்கட்டும்; அது வரை யிலும் யார் உயிர்வாழப்போகிறார்கள்? இப்பொழுது போதும் உயிரை நிறுத்தி வைப்பதற்காக அரை வயிற்றுக் கஞ்சியே போதும்" என்று தானே சொல்லுவார்கள்.

குந்தக்குடிசையில்லை; ஒண்ட மாநிழல் கூடக்கிடைக்க வில்லை; வெய்யிலால் வெதும்புகிறார்கள்; மழையால் வருந்துகி றார்கள்; பனியால் நடுங்குகிறார்கள்; இவர்களைப்பார்த்து, இப்பொழுது உங்களுக்கு ஒரு குடிசை வேண்டுமா? அல்லது இன்னும் பத்து ஆண்டுகள் கழித்தபின் ஒரு தோட்டத்தோடு கூடிய மாளிகை வேண்டுமா? என்று கேட்டால் அவர்கள் எனன சொல்லுவார்கள்? "பத்து வருஷங்களுக்கு உயிரோடி ருப்பது என்ன நிச்சயம்; இப்பொழுது ஒரு குடிசை கிடைப் பதே போதுமானதாகும்." என்று தானே கூறுவார்கள்?

"காளைக்கு வரும் பலாப்பழத்தை விட இன்று கிடைக் கும் களாப்பழம் நல்லது" என்பது பழமொழி. ஆகவே இப் பொழுதைய துன்பம் தாங்க முடியவில்லை; இதை நீக்கிக் கொள்வதற்கு உதவிவேண்டும்; இதற்குக் கிடைக்கும் உதவியை அலட்சியம் செய்யாதிருத்தலே அறிவுடையார் செய்கை இன் னும் பத்தாண்டுகள் கழித்து வராளமான இன்பத்தை அனுப விக்கப் போவது உண்மையாக இருக்கலாம்; ஆனால் இப் பொழுதுள்ள துன்பத்துக்கு வழி யென்ன? பதது ஆண்டு கழித்து இன்பங்கிடைக்கும் என்று நினைத்துக் கொண்டு

அது வரையிலும் துன்பத்தையே அனுபவிப்பதா? கிடைக்கும் இன்பங்களையும் முன் பின் ஆலோசியாமல் துறந்து விடுவதா? இச்செயல் மனித வாழ்வின் தன்மைக்குச் சிறந்ததாகுமா? ஒருகாலும் சிறந்ததாகாது என்பதே நமது முடிபு.

இச்செய்தி வெகு சாதாரணமானது; எல்லோராலும் அறியக்கூடியதாகும்; இவ்வுலகில் காமே கண்கூடாகப் பார்க்கக்கூடிய இவ்வனுபவத்தை வைத்துக் கொண்டு கொஞ்சம் மத விஷயத்திலும் கவனஞ்செலுத்தினால் பல உண்மைகளை அறிந்து கொள்ளலாம்.

மக்களுக்குள் பல விஷயங்களில் வேற்றுமையுண்டு; ஒருவர் கிழக்கு நோக்கினால் மற்றொருவர் மேற்கே பார்ப்பார்; ஒருவர் தெற்கு நோக்கினால் மற்றொருவர் வடக்கு நோக்கு வார; ஒருவர் தாடிவளர்க்கவேண்டுமென்றால் மற்றொருவர் மழுங்கச் சிரைக்கவேண்டும் என்பார்; இவ்வாறு எல்லா விஷயங்களிலும் மக்களுக்குள் எண்ணை வேறுபாடுகள் உண்டு. ஆனால் ஒன்றில் மாத்திரம் எல்லோருக்கும் ஒருமித்த கருத்துண்டு. அது "நாம் இவ்வுலகத்தில் துன்பமின்றி இன்பமாக வாழவேண்டும்" என்பதாகும். இதை வேண்டாம் என்று வெறுப்பவர் யாருமில்லை.

"இவ்வுலக வாழ்க்கையில் இன்பமில்லை; துன்பகரமானது; அன்றியும் நிலையாமையையுடையது; இன்பம் போலக் காணப்படினும் அது நிலையுள்ள இன்பமாகாது; ஆதலால் மறுவுலக இன்பம், அதாவது மோட்ச சுவர்க்க இன்பம் ஒன்றே அழியாத இன்பமுடையது; அதை நாட முயலவேண்டும்" என்று கூறுவோர் சிலருண்டு.

இவர்களே தத்துவ ஞானிகள் என்று சொல்லப்படுவார்கள்; வேதாந்திகள் என்றும் கூறப்படுவார்கள்; வைதீகர்கள் என்றும் அழைக்கப்படுவார்கள்; மதவாதிகள் என்றும் சொல்லப்படுவார்கள்; இவர்கள் இவ்வுலக இன்பத்தை உண்மையில் வெறுப்பவர்களாயிருந்தாலும், இன்பமே வேண்டாமென்பது இவர்கள் நோக்கமல்ல. பைதியக்காரத்தனமாக அழியாத இன்பம் என ஒன்று வேறு எங்கேயோ ஓர் உலகத்திலிருக்கிறதென்று நம்புகிறார்கள்; இந்நம்பிக்கை காரணமாக அந்த அழியாத இன்பத்தைப்பெற இவ்வுலக இன்பத்தை வெறுக்கிறார்கள். எனவே இவர்கள் கருத்தும் இன்பம் அனுபவிக்க

வேண்டும் என்பதைத்தவிர வேறொன்றும் இல்லை என்பதை அறியலாம்.

இன்பம் அனுபவிக்க வேண்டும் என்பதில் எல்லாருக்கும் கருத்து ஒற்றுமை யிருந்தாலும், அதை அடைய முயல்வதில் சிலர் வெற்றி பெருகிறார்கள்; பலர் ஏமாறுகிறார்கள்; ஏமாறுகிறவர் தமது நோக்கம் வெற்றி பெறாமல் வாழ்நாள் முழுதும் வருந்தி மடிகிறார்கள். இந்த ஏமாற்றத்திற்குக் காரணம், பகுத்தறிவின்மை—பயங்கொள்ளித் தனம் என்று கூறி விடலாம். சுயநலவாதிகள்—மதவாதிகள் என்பவர்கள் மக்களுடைய மனோபாவத்தை நன்கறிந்தவர்கள்; கூர்மையான மதிவன்மையுடையவர்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் சுயநலத்தை மாத்திரம் கைவிடாதவர்கள்; ஆதலால் மக்களை ஏமாற்றுவதற்குப் பல தந்திரங்களைக் கற்பித்துள்ளனர் அத்தந்திரங்களினாலேயே மக்களும் ஏமாறுகின்றனர்.

ஒவ்வொரு மனிதனிடத்திலும் கீழ்வரும் எண்ணங்கள் உள. காடுவாவா என்றுசொல்லவும், வீடு போபோ என்று வழியனுப்பவும் உள்ளகிழவனிடத்தும் இவ்வெண்ணங்கள் உள; ஒவ்வொருமனிதனும் தான் எப்பொழுதும் இளமையோடு வாழ அவாவுறுகின்றான்; நல்ல அழகிய இளமை மாறாத பெண்களுடன்கூடி வாழ ஆசைப்படுகிறான்; தனக்கு எள்ளளவாகிலும் செல்வம் இருக்க வேண்டும் என்று விரும்புகிறான்; தான் கினைத்தவைகளையாவும் துன்பமில்லாமல் நினைத்தவுடன் கிடைக்குமானால் கவலையில்லாமல் வாழலாம் என்று எண்ணுகின்றான். இவ்வாறு எண்ணாத மக்கள் யாருமே இல்லையென்று கூறி விடலாம். இவை பொதுவாக மனிதர்களுடைய மனோபாவமாகும் இந்த மனப்பான்மையை மதவாதிகள்—வைதீகர்கள் நன்கறிந்தவர்கள்.

இத்தகைய மனோபாவமுடைய மக்களை ஏமாற்றவே சுவர்க்கம் என்பதைச் சிருஷ்டித்திருக்கிறார்கள். சுவர்க்கத்தில் இருப்பதாகக் கூறப்படும் பொருள்களை ஆராய்ந்தால் இவ்வுண்மை விளங்கும்.

முதலாவது அங்கே உண்ண அமிர்தம் இருக்கிறது. அமிர்தத்தை உண்பவர்கள் சாவாமல் இருப்பார்கள்; இளமை கூட மாறாமல் இருப்பார்களாம்; இவைகளுக்கு கை, கால் மூப்பு, பிணி முதலியன இல்லையாம். ஆகவே அங்கு சென்றவர்கள் இறக்காமல் உயிர் வாழலாம் என்று கூறினார்கள்.

சாவுக்கு அஞ்சும் மக்கள் இத்தகைய உலகை விரும்பாமல் இருப்பார்களா?

இரண்டாவதாக அங்கு அரம்பை மாதர்கள் இருக்கிறார்கள்; அழகு மாறாதவர்கள்; சுவர்க்கஞ் சென்றவர்கள் யாரும் கட்டுத்திட்டமின்றி அவர்களை அனுபவிக்கலாம்; அவர்களை மணந்து கொள்ளலாம்; அவர்களுடன் கூடிக்களித்திருக்கலாம்; என்றும் கூறிவைத்திருக்கிறார்கள். பெண்ணாசை கொண்ட மக்கள் இவ்வுலகத்தை வெறுப்பார்களா? இவ்வுலகைப்பெற விரும்புவது இயல்புதானே.

மூன்றாவதாக அவ்வுலகமே பொன்னுலகம்; கடக்கும் தரை, இருக்கும் மாளிகை, உட்காரும் சாற்காலி, படுக்கும் கட்டில் எல்லாம் பொன்; எங்கு நோக்கினும் பொன்மயம்; மண்ணைக் கண்ணால் காணவே முடியாது. என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் பொன் தேட வேண்டிய கஷ்டமே அங்கு சென்றவர்களுக்கு ஏற்படாது. பொன்னாசை கொண்ட மக்கள் இவ்வுலகை வெறுக்க முடியுமா? இவ்வுலகைப்பெற எத்தகைய தியாகமும் செய்வார்கள் என்பதில் என்ன சந்தேகம்?

நான்காவதாக அங்கு, நினைத்தவர்க்கு நினைத்தவற்றை உடனே கொடுக்கக்கூடிய ஐவகை நிதிகள் இருக்கின்றன. அவை கற்பகத்தரு, காமதேனு, சிந்தாமணி, சங்கநிதி, பதும நிதி முதலியனவைகள். ஆதலால் அங்கே சென்றவர்களுக்கு யாதொரு கவலையும் கிடையாது என்று சொல்லப்படுகிறது.

இந்த நான்கையும் விரும்பாத மக்கள் இல்லை; இவையே பொதுவாக எல்லா மக்களுடைய குறிக்கோளாக இருக்கும் பொழுது இவற்றை வெறுப்பவர்கள் யார்? இவை நான்கும் உள்ள ஒரு உலகம் இருக்கிறது என்றால், போராசை பிடித்த மக்கள் ஆராய்ச்சியின்றி இதனை நம்புவதில் என்ன வியப்பு!

"ஆனால் இத்தகைய உலகத்தை இப்பிறப்பில் காணமுடியாது; மறு பிறப்பில் தான் காணலாம்; மறுபிறப்பிலும் இவ்வுலகத்தை அடைய வேண்டுமெனில் இவ்வுலகில் புண்ணியங்களைச் செய்ய வேண்டும். புண்ணியஞ்செய்யாதார்க்கு இவ்வுலகம் கிடையாது; நான்திகர்களும், சந்தேக வாதிகளும் இவ்

வுலகை எட்டிக்கூடப் பார்க்க முடியாது; என்று குருமார்கள் கூறிவைத்தார்கள். மறு பிறப்பு நம்பிக்கையும் இவ்வுலகக் கற்பனைக்கு ஒரு அசையாத அஸ்திவாரமாயிற்று.

இந்தச் சொர்க்க பதவியை அடைய வேண்டும் என்று ஆசைப்படுவோர்க்குப் பல சடங்குகளைக் காட்டினார்கள். சிராார்த்தம், கருமாதி, கோதானம், பூதானம் போன்றவைகளை ஏற்படுத்தினார்கள்; தீர்த்தயாத்திரை, தலயாத்திரை முதலியவைகளை விதித்தார்கள். தீர்த்தக்கரைகளிலும், தலங்களிலும் புரோகிதர்களுக்குத் தான தருமம் செய்யும்படி கட்டளையிட்டார்கள். இவைகளை வற்புறுத்த பல புராணங்களையும் ஸ்மிருதிகளையும் ஏற்படுத்தினார்கள்; இந்த நூல்களை பகுத்தறிவாளர் கட்டுக்கதைகள் என்று கூறினால் அதை மற்ற மக்கள் எளிதில் நம்பிவிடாதிருக்க ஒரு தந்திரஞ் செய்தார்கள். அத்தந்திரம் அந்நூல்கள் யாவும் கடவுள் எனபவர் கட்டளைப்படி தெய்வீகத் தன்மைவாய்ந்த முனிவர்களால் கூறப்பட்டவை என்பதே. இப்பொழுது கஷ்டப்பட்டாலும், இறந்த பின்னாவது இத்தகைய சுவர்க்கத்தைப் பெறலாம என்ற போராசையால் மக்களும் இவைகளை நம்பினார்கள்.

ஐயோ! பாவம்! இவ்வுலகில் ஒரு வேளை சோற்றுக்கு வழியின்றித் துன்பப்படும் ஏழை மக்கள் கூட்டமே இதனால் ஏமாறுகின்றனர். இந்த மறுவுலக வாழ்வில் அதிக நம்பிக்கை வைக்கின்றனர்; மெய்வருந்தி உழைத்துச் சம்பாதிக்கும் தங்கள் பொருளை வீண்விரயமாக்குகிறார்கள். வயிற்றுவலிக்காரன் எதை மருந்து என்று கொடுத்தாலும் சாப்பிடுவது இயல்புதானே. பணக்காரர்கள்—அறிவுடையவர்கள் இதனால் ஏமாறுவதில்லை; ஒருவகையில் அவர்களுக்கு இதனால் இலாபம் உண்டென்று கூடக்கூறலாம். ஏழைமக்கள் ஏழை மக்களாகவே இருக்க வழி செய்வது அவர்களுக்கு இலாபம் அல்லவா? சில மக்கள் ஏதோ கிடைத்த பொருளைக்கொண்டு இப்பொழுது சுகமாக வாழ்வோம். இறந்த பிறகு அடையும் இன்பத்தைப்பற்றி இப்பொழுது கவலை வேண்டாம். என்று சொல்லுவார்களானால் அவர்களைப் பயமுறுத்துவதற்கு நரகத்தைக் கற்பனை செய்திருக்கிறார்கள்.

பொதுவாக மனிதர்கள் எவைகளுக்குப் பயப்படுவார்களோ அவைகளை யெல்லாம் நரகமாகச் சிருஷ்டித்திருக்கிறார்

கள். இதைக்கொண்டே நரகம் கற்பனை என்பதை உணரலாம்.

நரகங்கள் கோடிக்கணக்காகக் கூறப்படுகின்றன. சில நரகம் வெறும் நெருப்புக் குழம்பாக இருக்குமாம். சில நரகம் முழுதும் கட்டுவாக்காலி மயமாக இருக்குமாம்; சில நரகங்களில் பாம்புகள் நிரம்பியிருக்குமாம்; சில நரகம் கொதிக்கின்ற எண்ணெய் மயமாக இருக்குமாம்; இவைகளைப்போலவே நமக்குத் தெரிந்த பொருள்களைக்கொண்டும், நாம் பயப்படக்கூடிய பொருள்களைக்கொண்டும் நரகலோகங்கள் கட்டப்பட்டுள்ளன.

மதங்களை நம்பாதவர்கள், சாஸ்திரங்களை நம்பாதவர்கள், குருமார்களை அலட்சியம்செய்கிறவர்கள், அவர்கள்சொற்களைக் கேட்காதவர்கள், குருமார்கள் கூறும் சடங்குகளைச் செய்யாதவர்கள், குருமார்களையும், சடங்குகளையும் நிந்திப்பவர்கள் ஆகிய இவர்கள் எல்லாம் நரகத்தை யடைவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

பொதுவாக இந்த சொர்க்க நரகக்கோளாறுகள் புரோகிதர்களாலேயே ஏற்பட்டன என்று சொல்லிவிடலாம். ஒருவன் சொர்க்கம் பெற வேண்டுமானால், குருமார், அல்லது புரோகிதர் சொற்படி கேட்டாகவேண்டும். எனெனில் சொர்க்க வாசலின் சாவி அவர்கள் கையிலேயே இருக்கின்றது. இவர்கள் உதவியில்லாமல் சொர்க்கம்பெற முடியாது என்று பொதுவாகப் பழமையான எல்லா மதங்களிலும் கூறப்படுகின்றது. சுவர்க்கம் அடையாதவர்கள்.சொர்க்கம் அடைவதற்கு வேண்டிய காரியங்களைச் செய்யாதவர்கள் நரகத்தை யடைவார்கள் என்று சொல்லப்படுகிறது.

ஆகவே இவற்றை நன்றாக ஆராய்ந்தால் சுவர்க்கம் என்பதும் நரகம் என்பதும் கற்பனை என்பதில் ஐயமில்லை என்று அறியலாம்; ஆசைகொண்ட மக்களை ஏமாற்றவே சொர்க்கம் கட்டப்பட்டது; பயங்கொண்ட மக்களுக்குப் பூச்சாண்டி காட்டவே நரகம் கட்டப்பட்டது; இதில்சிறிதும்சந்தேகம் இல்லை. இவ்வுண்மையை உணராதமக்களே இவற்றைநம்பிஏமாறுகின்றனர்; வீண்சடங்குகளில் பொருளைச் செலவு செய்கின்றனர். மெய் வருந்திச் சம்பாதிக்கும் சிறிது பொருளையும் இவ்வுலக இன்பம்பெறச் செலவழிக்கின்றார் இலர்; மறுவுலக இன்பம்

வைதீகம் தொலைக!

(S. சிவப்பிரகாசம்.)

(வேதையாகு திந்தவேளை எ—மேட்டு.)

மோசமான வைதிகத்தால் நாசவாழ்வு கொண்டார் மக்கள்!
ஆசையூட்டும் வேசையர் போல் ஆரியர் அந்நாளில் செய்த, (மோ)

தொகையரா.

மாசுறு மதம் சாதி மல்கிடலானதே!
நேசமார் மக்களுள் வேர்பகை மூண்டதே!
தேசமுருக்குலைத்து சீர்கெடலானதே!

பாட்டு.

கல்லைத் தெய்வமென்றே சொல்லி கல்லறிவை மாய்த்து [விட்டார்!
எல்லையற்றே சடங்கு சொல்லி, ஏழ்மை வாழ்வுண்டாக்கி [விட்டார்.

தொகையரா.

பொல்லாப் புரோகிதம் போக்கிடுவீரே!
புனிதனிற் சமமுண்டாக்கிடுவீரே!
எல்லாம் ஓர் குலம் எனமதிப்பீரே!

பாட்டு.

பாழுஞ்சாதி பேதந்தீர்ப்பீர்! பகுத்தறிவை நாளும் சேர்ப்பீர்
வாழ்விலின்பம் யாண்டும் சேர்ப்பீர் வையமாந்தர்! [வறுமை தீர்ப்பீர்!

கருதி வீண்செலவு செய்து ஏமாறுகின்றனர்; இவ்வுலகில் தங்கள் வாழ்நாள் முழுதும் துன்புறுகின்றனர். வயிற்றுப் பிள்ளையை கம்பி மாடுமேய்க்கும் பிள்ளையை காலைவாரியடிப்பது போல, இறக்கபிறகு ஏதோ கிடைக்கப்போகிறது என்பதற்காக இப்பொழுது தனது சுகத்தைத் துறப்பது பைத்தியக்காரத்தனம் அல்லவா? அறிவுடையவர்கள் "மனிதன் இவ்வுலகில் பிறக்கின்றான்; இருக்கின்றான் இறக்கின்றான்" என்று சர். சி. வி. ராமன் கூறியதை மறுக்க முடியாது. இதைவிட மனிதனுடைய வாழ்வைப்பற்றி வேறு ஒன்றும் சொல்ல முடியாது. ஆதலால் இக்காலத்தில் தன் வாழ்வைச் செம்மைப்படுத்திக்கொள்ள முயலவதே அறிவுடமையாகும். சுவர்க்க நரகங்களால் ஏமாறுவது அறியாமையே. இது நமது சொந்தக்கருத்து. நீங்களும் ஆராய்ங்கள்!

மனித சமூக உறவு முறை.

(ஈ. வெ. ரா.)

[இக் கட்டுரை 8-8-1929 தேதிக்கு ஈ. வெ. ராவால் விசேஷ கட்டுரையாக எழுதப்பட்டதாகும்.]

மக்கள் சமூகத்தில் சௌக்கியம் பாராட்டவும், சொத்துக்கள் அனுபவிக்கவும் கலவிகள் செய்யவும், உறவு முறை என்பதாக ஒரு நியதி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அந்நியதிக்கு எவ்விதக் கொள்கையும், ஆதாரமும் இல்லாமலும் உலகமெங்குமுள்ள மனித சமூகத்தில் ஒரே விதமான உறவு முறை அனுஷ்டிக்கப்படாமலும், தேசாச்சாரம், ஜாதியாச்சாரம், மதாச்சாரம், பழக்கம், வழக்கம் என்கின்றபலவகையான மார்க்கத்தைப் பின் பற்றியே உறவு முறைகள் கையாளப் படுகின்றன; யாதொரு நியாயமும் காரணமும் சொல்லப்படாமலே பின்பற்றப்படுகின்றன. அவ்வளவோடு மாத்திரமல்லாமல் இம்முறைகள் சிறிதும் தவறாமல் மிகவும் ஜாக்கிரதையாய் கையாளப்பட வேண்டும் என்கின்ற நிர்ப்பந்தங்களுக்கும் ஆளாகியிருக்கின்றன.

ஆகவே, இவைகளையெல்லாம் பார்த்தால் உறவு முறைகள் என்பது அர்த்தமற்ற பழக்க வழக்கத்தில் கட்டுப்பட்டதாகவும், குருட்டு நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டதாகவுந்தான் காணப்படுகின்றனவே தவிர அவசியங்களை அறிந்து கொண்டதாகக் கருத முடியவில்லை.

உதாரணமாக, சகோதரர்கள் விஷயத்தில், ஆண் சகோதர உறவுக்கு ஒரு முறையும், பெண் சகோதர உறவுக்கு ஒரு முறையும் கையாளப்பட்டு வருகிறது. ஆண் சகோதரன் வயிற்றில் பிறந்த குழந்தைகளை தங்கள் தங்கள் குழந்தைகளாகவும், பெண் சகோதரி வயிற்றில் பிறந்த குழந்தைகளைத் தாங்கள் கன்னியாணம் செய்யத் தகுந்த பந்தத்தையும் உடையவர்களாகவும் இந்துக்களில் பெரும்பாலோர் கருதுகிறார்கள்.

முஸ்லீம் சமூகத்திலோ பெண் சகோதரி மகளை கலியாணம் செய்து கொள்ளுவது தகாது என்றும்; சிறிய தகப்ப

னார், சிறிய தாயார் பெண்ணைக் கலியாணம் செய்வது தகும் என்றும் கருதப்படுகிறது.

சில சமுகங்களில் ஒரு விதத்தக் கலப்பும், முன் சம்பந்தமும் இல்லாதிருந்தாலும் குலங்கள் பெயரையும், கோத்திரங்கள் பெயரையும் பார்த்துக் கொண்டு அதன் பேரிலேயே கலவிக்கு—கலியாணத்துக்கு முறைகள் வைத்துக் கொள்ளப் படுகின்றன.

சிருஷ்டிகர்கள் சமுக உறவுமுறை என்பதும் எவ்விதக் கட்டுப்பாட்டுக்கும் உடன்படாமல் கண்மூடித்தனமாய் ஏதோ ஒரு முறையைப் பின்பற்றப்படுவதாய் இருக்கின்றது.

வேறு காடுகளில் தன் கூடப்பிறந்த சகோதரிகளையே, அதாவது சயாம் தேசத்தில் ஆரிய மதத்தைப் பின் பற்றுகின்ற ஆசர்கள் தன கூடப்பிறந்த தங்கையையே மணந்து கொண்டு கலவி செய்கிறார்கள். பவுத்த ராமாயணத்தில், ராமனுக்குச் சீதை உடன்பிறந்த தங்கை எனறும், அக்காலத்தில் ஆரியர்களில் ஒரே தாய் தகப்பன் வயிற்றில் பிறந்த அண்ணன் தங்கைகள் கலியாணம் செய்து கொள்ளும் வழக்கம் இருந்த தென்றும், அதை அனுசரித்தே தான் இப்போது சயாம் தேசத்தில் நடந்து வருகிறதென்றும் அறியக்கிடக்கின்றது.

மலையாள தேசத்தில் சில பாகங்களிலும், திபேத்து தேசத்திலும் ஒரு பெண் பல புருஷருக்கு மனைவியாய் இருக்கும் வழக்கம் இருந்து வருகிறது. கம்மாட்டில் ஒரு புருஷன் பல ஸ்திரீகளைக் கலியாணம் செய்துகொள்ளுகிறான்.

சில ஜாதிகளில் ஒரு குடும்பத்தில் மகனுக்குக் கட்டப்பட்ட பெண் தகப்பனுக்கும், கலியாணம் செய்து கொண்டவனுடைய மற்ற சகோதரர்களுக்கும் கலவிக்குரிய ஸ்திரீயாகக் கருதப்படுகிறாள்.

கம்மாட்டில் தாசி ஜாதி என்பவர்களிலும், மலையாளத்தில் நாயர் ஜாதி என்பவர்களிலும் குடும்ப சொத்துக்குப் பெண்களே உரிமையானவர்களாக இருக்கிறார்கள். மற்ற சமூகங்களில் குடும்ப சொத்துக்குப் பாத்தியஸ்தர்கள் ஆண்பிள்ளைகள் மட்டுந்தான் என்று கருதப்படுகின்றது.

இஸ்லாம் சமூகத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சொத்துரிமை அளிக்கப்பட்டு, பங்கில் வித்தியாசம் கற்பிக்கப் பட்டிருக்கிறது.

ஐரோப்பியர்களிலும் உறவு முறை, கலியாண முறை ஆகியவைகளில இந்தியாவைவிட பல மாறுதல்களும் பல தலைகீழ் முறைகளும் இருக்கக் காண்கின்றோம். அத்தை மகள், சிற்றப்பன் மக்கள் ஆகியவர்களை ஒரே மாதிரியாக ('கெவ்யூ,,—'கெய்ஸ்')ப் பாவிக்கிறார்கள். அதுபோலவே சகோதரன் மக்களுக்கும், சகோதரி மக்களுக்கும் ஒரேவிதமான உறவு முறை கொண்டாடுகிறார்கள். அழைக்கும் முறையிலும் ஒரே முறை வைத்துத்தான் அழைக்கிறார்கள்.

சிலதேசங்களில் பெண்கள் பாடுபட்டு சம்பாதித்து ஆண்களுக்குப் போடுகிறார்கள். அத்தேசங்களிலுள்ள ஆண்கள, இங்குள்ள பெண்களைப்போல, அலங்காரம் செய்துகொண்டு, பெண்களுடைய போகப் பொருளாய் வீட்டில் இருக்கிறார்கள்.

சிலவிடங்களில் விபசாரத்தனத்துக்காக பெண்களை நீக்கி வைக்கிறார்கள். வேறு சிலவிடங்களில் அதே போன்ற விபசாரத்தனத்துக்காக ஆண்களை நீக்கி வைக்கிறார்கள். சில விடங்களில் ஆண்கள் விபசாரத்தனத்தை குற்றமாகப் பாவிப்பதில்லை. இன்னுஞ் சிலவிடங்களில் பெண்கள் விபசாரத்தனமே குற்றமாகப் பாவிக்கப்படுகிறது. மற்றுஞ் சிலவிடங்களில் விபசாரத்தனம் எவ்வளவு இருந்தாலும் அதைப்பற்றிய பேச்சே யில்லாமல் இருந்து வருகிறது. சில வகுப்பார்கள் பெண்களைக் கலியாணமே செய்து கொள்வதில்லை.

சிலர் புருஷன் செத்தால் அதிகமாக அழுகிறார்கள்; ஆனால் பெண்சாதி செத்தால் அதிகமாகத் துக்கப்படுவதில்லை. வேறு சிலர் மனைவி செத்தால் அதிகமாக அழுகிறார்கள் புருஷன் செத்தால் அதிகமாகத் துக்கப்படுவதில்லை. அது போலவே சிலர் ஆண் குழந்தை செத்தால் அதிகமாக அழுகிறார்கள்; வெகு காலைக்கு விசனப்படுகிறார்கள். ஆனால் அங்கு பெண் குழந்தைகள் மரணத்துக்கு அதிகம் கவலைப்படுவதில்லை. சில விடங்களில் பெண் குழந்தைகள் மரணத்துக்காக அடைகிற விசனமும் துக்கமும் ஆண் குழந்தைகள் சாவை முன்னிட்டு அவ்வளவாக அடைகிறதில்லை.

பொதுவாய் சாவுக்காக துக்கப்படுவது என்பது பெரும்பாலும் வயது நிலைமை, இறந்தவர்களால் தங்களுக்கு ஏற்பட்ட— ஏற்படும்—பலா பலன் முதலியவைகளைப் பொருத்தே உண்டாவதாகயிருந்து வருகிறது.

ஆகவே கலவிக்கும், துக்கத்துக்கும், விபசாரத்துக்கும் சொத்துக்கும், கலியாணத்துக்கும் அகில உலக மனித சமூகம் முழுமைக்கும் பொருந்தும்படியான ஒரு முறையோ, வரையறையோ, காரண காரியங்களோ பொதுவாய் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

பழைய சரித்திரம் ஒன்றில், ஒரு தேசத்து அரச முறையில் அந்த அரசனுடைய (ராணி) பெண்சாதி இறந்துவிட்டால் உடனே அந்த அரசனின் மகள் ராணி(மனைவி)யாக ஆகிவிடுகிறாள் என்றும், அரசன் இறந்து விட்டால் உடனே மகன் ராஜ (புருஷ)னாக ஆகி விடுகிறான் என்றும், உண்மையான புருஷன் மனைவியாக ஆகிவிடுகிறார்கள் என்றும் குறிப்பிட்டிருப்பதைப் பார்த்த ஞாபகம் இருக்கிறது.

இவைகளையெல்லாம் யோசிக்கும்போது கலவி முறை என்பதும், சொத்து முறை என்பதும் பெரும்பாலும் தேசாச்சாரம், மதாச்சாரம் அல்லது ஜாதியாச்சாரம் பழக்க வழக்கம் முதலியவற்றைப் பொருத்திருக்கிறதே தவிர, வேறு நியாயமான — நிர்ப்பந்தமான — உலகமெங்கும் ஒரே வழி துறையான—காரண காரியமான முறை இடையவே இடையாது என்றுதான் யூகிக்க வேண்டியிருக்கிறது. இது விஷயத்தில் மற்ற ஜீவன்களின் இயற்கை சுபாவங்களும் எவ்வித வரையறைக்குக் கட்டுப்பட்டதாகவும் காண முடிவதில்லை.

நமது பழங்கால்ப் புராணங்களைப் பார்த்தால் தான் பெற்ற மகளையும், தன்னை ஈன்ற தாயையும் புணர்ந்த கதைகள் பல இருக்கின்றன. முறையற்றவிபசாரத்தன சம்பந்தமான கதைகள் எண்ணிறந்தவைகளிருக்கின்றன. குருவின் மனைவி, சகோதரன் மனைவி ஆகியவர்களை கலவிசெய்வது குற்றமாகக் கருதப்படவில்லை. பிள்ளைப்பேறுக்காக வேறு புருஷருடன் செய்யுங் கலவி குற்றமாகக் கருதப்படவில்லை. சிலவிடங்களில் சிஷ்யைகள் குருமார்களுடன் கலவி செய்வது குற்றமாகக் கருதப்படவில்லை. சிலவிடங்களில் பிராமணர்களுடன்கலவி செய்வதைப் பிசகென்று கருதுவதில்லை. கடவுள்கள் பக்த

பெண்களிடம் கலவி செய்த கதை அனந்தம்.

பத்துப் பணத்துக்கு மிஞ்சின யதிவிரதை இல்லை என்றும், ஆணும், இடமும் கிடைத்தால் எந்தப் பெண்ணும் பதிவிரதையாய் இருக்க முடியாது என்றும் "தர்ம சாஸ்திரம்" கூறுகின்றன,

பெண் கதியே இப்படியானால் ஆண் கதியைப் பற்றி கூறவேண்டுமா?

ஆகவே இவ் விஷயங்களில் இன்னதுதான் சரி, இன்னதுதான் தப்பு என்று குறிப்பிடுவதற்கில்லாமல் இருந்து வருகிறது. ஆனாலும் கலவிக்கான வைத்தியமுறைப்படியும், தேகதத்துவ முறைப்படியும் சில முறைகள் கற்பிக்கப்பட்டிருப்பதை குற்றமென்று சொல்ல இதுவரை எவரும் முற்படவில்லை. ஆதலால் இதைப் பகுத்தறிவுள்ள மனிதன் ஒப்புக்கொண்டாகவேவேண்டும் என்றுஞ் சொல்லலாம்.

என்றாலும் கலவியைப்பற்றிய காரியங்களுக்கு பாவம், புண்ணியம், கடவுள் தண்டனை, மானம் என்பவைகள் பொருத்தமாகும்படியாக எவ்வித குறிப்பிட்ட ஒரே மாதிரியான முறையும் கண்டுபிடிக்க முடியாமலிருந்து வருகின்றதென்பது மேற்கண்ட விஷயங்களால் கருதவேண்டியிருக்கிறது

இந்த உறவு முறை சம்பந்தம், கலவி சம்பந்த மாத்திரமல்லாமல் மற்றும் மனித ஒழுக்க சம்பந்தமான பல காரியங்களிலும் பாவ புண்ணியம் நிர்ணயிக்கவோ, நன்மைதின்மை நிர்ணயிக்கவோ முடியாமல், இதுபோலவே தேசத்துக்கு ஒரு முறை, மதத்துக்கு ஒரு திறமை, வகுப்புக்கு ஒரு மார்க்கம், ஜாதிக்கு ஒருவிதம் என்பதாகத்தான் இருந்து வருகிறது.

ஆகவே இவ்விஷயங்களை எடுத்துக்காட்டி, மனிதன் எப்படி நடந்து கொள்ளுவதென்னும் கேள்விக்குப் பொது அறிவும் ஆராய்ச்சியுமுள்ள மனிதன் என்ன சொல்ல முடியும் என்று யோசிக்கும்போது 'சமயோசிதம்' என்பதைத்தவிர வேறு வழிகாட்டி இருப்பதாக அறிய முடியவில்லை என்பதற்காகவே இவ்வுறவு முறை விஷயத்தை உதாரணமாக எடுத்துக் காட்ட வேண்டியதாயிற்று.

புதுமைப் பெண்.

II

(பண்டித S. முத்துசுவாமிப் பிள்ளை.)

மக்கள் காட்டுமிராண்டிகளாயிருந்த காலத்து, பெண்கள் அதிக சுதந்தரமுடையவர்களாகவே இருந்தார்கள். பெண்கள் வேட்டையாடவில்லை; புருஷனே வேட்டையாடினான். ஏனெனில் பெண்கள் கால்கள் குறுகியவை; அவர்களுக்கு வேகமாக ஓடவும் முடியாது. இதே காரணத்தினால் பெண்கள் போர் புரியவுமில்லை. அநாகரிக காலத்து பெண்கள் வீட்டுக்குள்ளிருந்து, பழக்கப்பட்ட மிருகங்களையும் பயிர்களையும் கவனித்து வந்தனர். குழந்தைகளைப் பராமரிக்கும் பொறுப்பும் பெண்களுக்கே இருந்து வந்தது. அப்பால் பிராணிகளில் எல்லாம் மிகக்குரூர சுபாவமுடைய பிராணியான மனிதனைப் பழக்கும் பொறுப்பும் பெண்களுக்கு ஏற்பட்டது. கடைசியில் புருஷனே பெண்களை அடிமைப்படுத்தி விட்டான்.

நாகரிகம் ஆரம்பமான காலத்திலேயே பெண்கள், அடிமைப்படுத்தப் பட்டனர். அடிமைத்தளையைத் தகர்த்தெறியும் வழியறியாது, ஆதிகாலப் பெண்கள் தவித்தனர். புருஷன் பெண்களைவிட உடல் வலிமை யுடையவன். அந்த வலிமையை விருத்தி செய்ய அவன் சதா முயன்று கொண்டிருந்ததினால் அவன் மேலும் மேலும் பலசாலியானான். எனவே எல்லாத்துறைகளிலும் அவனே தலை சிறந்து விளங்கினான். அப்பால் பலவீனர்களைக் காப்பாற்றும் பொறுப்பு, ஆண்களுக்கே உரியதென ஒரு தப்பெண்ணத்தையும் உருவாக்கி விட்டான்.

எனவே பெண்கள் எல்லாம் பலவீனர்கள் என்றும், அவர்களைக் காப்பாற்றவேண்டியது புருஷர் கடமையென்றும்

புருஷ லக்ஷணமென்றும் ஓருமூட நம்பிக்கையும் ஏற்பட்டது. இவ்வண்ணம் புருஷர்கள் அகம்பாவம் வளரத்தொடங்கிற்று. அழகும் சாந்த குணமும் உடைய பெண்கள் புருஷர்களால் போற்றப்பட்டார்கள். புருஷர் பாராட்டைப் பெரிதென மதித்த பெண்கள் கலைகளில் மடமைக் களஞ்சியங்கள் ஆயினர். தன்னம்பிக்கையுடைய சில பெண்கள் புருஷர்களுக்கு அடங்கியிருக்க விரும்பவில்லை. சில சுதந்தர உணர்ச்சியுடைய பெண்கள் அவர்களுடன் சமத்துவம் பாராட்டத் தலைப்பட்டனர்.

அத்தகையோர் பேய்கள் என்றும், சூனியக்காரிகள் என்றும், அடங்காப்பிடாரிகள் என்றும் மேனாடுகளில் குற்றஞ்சாட்டப்பட்டு வதிம்சிக்கப்பட்டனர்; பலர் எரிக்கப்பட்டனர். உலகவாழ்வுக்கும்வெற்றிக்கும் தேக பலம் அவ்வளவு இன்றியமையாத தல்லவென்றும் கொள்கை ஏற்பட்டபோது, தமது பலவீனம் அவ்வளவு இழுக்கான தல்லவென்று பெண்கள் கருதலாயினர். சில சந்தர்ப்பங்களில் பெண்கள் புருஷர்களைத் தோற்கடித்தார்கள்; புருஷர்களை விடத் தமக்கு அதிக புத்தியுண்டென்றும் நிரூபித்துக் காட்டினர். பல துறைகளில் பெண்களும் ஈடுபட்டுழைத்து வெற்றிக் கொடிநாட்டினர். காலக்கிரமத்தில் எல்லாத்துறைகளிலும் முனைந்து நிற்கலாயினர். பலதுறைகளிலும் அநுபவம் பெற்ற பிறகு புருஷர்களை பகிரங்கமாகவும் மீறத் தலைப்பட்டனர். சுதந்தர உணர்ச்சி சிறிது சிறிதாக அவரது உள்ளத்துத் தோன்றிக் காலக்கிரமத்தில் வலுப்பெற்றது. கடைசியில் ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானம் என முடிவு கட்டினர்.

வாக்குரிமை பெற, இந்தியப் பெண்கள் போராடத் தேவையுண்டாகவில்லை. இந்தியப்பெண்கள் வெகு சுலுவாக—சுயபிரயத்தினமில்லாமலே வாக்குரிமை பெற்றனர். சென்னை மகாணத்திலே ஒரு பெண் சட்டசபை உபதலைவராயிருமானார். மிக்க காகரிகம் வாய்ந்த காடாக மதிக்கப்படும் ஜப்பானிலும் கூடப் பெண்கள் இன்றும் வாக்குரிமை பெறவில்லை.

மேனாட்டுப் பெண்கள் வாக்குரிமை பெற வெகுகாலம் பிடித்தது. மேனாட்டிலே, பெண்கள் வாக்குரிமைக் கிளர்ச்சி தொடங்கியபோது கேலிசெய்யப்பட்டார்கள். பிரஜா உரிமைகள் பெற பெண்களுக்கு உடல் வலி இல்லை யென்று புருஷர்கள் கூறினார்கள்.

அம்மட்டோ! தகுதியுடையவர்களைத் தேர்ந்தெடுத்து வாக்களிக்கும் மனப்பான்மையும் பெண்களுக்கு இல்லையென வாதித்தனர். பொதுஜனப் பிரதிநிதித்துவம் இல்லாத சர்க்காருக்கு வரி வசூல் செய்ய உரிமையில்லை என்ற கொள்கை அமலில் இருக்கும் நாடுகளிலும்கூட பெண்கள் பிரஜா உரிமையோ வாக்குரிமையோ இல்லாதவர்களாகவே இருந்தனர்.

பிள்ளை பெற மட்டும் தங்களுக்கு சக்தி யுண்டென்றும் வாக்குரிமையைப் பிரயோகம் செய்ய சக்தி யில்லை யென்றும் பெண்கள் ஒப்புக் கொள்ளவில்லை.

வாக்குரிமை முக்கியமான பிரச்சினை. புரட்சிக்கு வாக்குரிமையே அடிப்படை. பெண்கள் உள்ளத்தில் தோன்றிய புது சுதந்திர உணர்ச்சிக்கு வாக்குரிமை வேட்கைதான் முதல் அறிகுறி. எனவே வாக்குரிமை இயக்கம் வலுப்பெற வலுப்பெற பெண்களது பாலுணர்ச்சியும் அதிகமாயிற்று. பெண்கள் ஆண்களைவிடத் தாழ்ந்தவர்கள் அல்லவென்றும் பிரபஞ்சத்திலே பெண்களுக்கும் ஓர் நியாயமான ஸ்தானமும் அந்த ஸ்தானத்துக்குப் பொருத்தமான உரிமைகளும்உண்டென்றும் பெண்கள் எல்லாம் உணரலாயினர்.

வாக்குரிமை வேண்டாமென்று கூறும் பெண்களை சிலதரத்துப் பெண்கள் மிகவும் பாராட்டினர். பொருளாதார விஷயங்களிலும் ஏனைய அம்சங்களிலும் புருஷர்களுக்கு அடிமைப்பட்டுக் கிடந்த பெண்களே அவ்வாறு கூறினார்கள். குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்ட பெண்கள், தங்களுக்காகத் தங்கள் கணவன்மார் வோட்டுக்கொடுப்பார்கள் என எண்ணினார்கள். ஆனால் கலியாணமாகாத பெண்களுக்குப் பிரதிநிதியார்?

கணவனையோ, சகோதரனையோ, தகப்பனையோ லக்ஷியம் செய்யாத பெண்களுக்குப் பிரதிநிதியார்?

கடைசியாக ஐரோப்பிய உலகப் பெரும்போரும் வந்தது, சுதந்திரத்தை நிலைநாட்டுவது, அந்த உலக மகாயுத்தத்தின் நோக்க மெனச் சொல்லப்பட்டது. அது வாஸ்தவமே. பெண்கள் சுதந்திரத்துக்கு அந்தப்போர் மறைமுகமாக உதவி புரிந்தது. அந்தப்போரிலேபுருஷர்கள்பெருவாரியாக மடிந்துபோனதினால்ஆண்கள் வகித்தஸ்தானங்களை வகிக்கப்பெண்களுக்கு

ஒருகருணம் கிடைத்தது. அகேகதுறைகளில் பெண்கள் அது வரைக் கால் வைத்ததே இல்லை. எனினும் பெண்கள் சளைக்க வில்லை. போர்க்கருவியுற்பத்திச்சாலைகளிலும் கூடப் பெண் கள் வெகுதிறமையாக உழைத்து வெற்றி பெற்றனர். வர்த்தக ஸ்தலங்களிலும் தலைமைவகித்து ஜெயமே பெற்றனர். சுருங் கக்கூறின், எல்லாத்துறைகளிலும் செயலாற்றத் தமக்குத் திற மை உண்டென நிரூபித்துக் காட்டினர் எனவே அவர்களுக்கு வாக்குரிமை யளித்து மரியாதை செய்யாமலிருக்க ஆண்களுக்கு மூடியுமா ?

சமாதான ஒப்பந்தம் ஏற்பட்ட போது, பெண்கள் நிலைமை என்னவாகுமோ என்று பலர் நினைத்தனர். பெண் கள் பழையபடி அடுக்களைக்குச் செல்லவேண்டியதாகத்தான் வருமா எனப்பலர் நினைத்தனர். ஒருமுறை சுதந்தரச்சுவையைப் பெண்கள் அனுபவித்து விட்டதினால், அவர்களது சுதந்தர வேட்கை பன்மடங்காய் உயர்ந்தது. பெண்கள் இப்பொழுது ஓரு மாதிரி அரசியல் சக்தி பெற்று விட்டதினால் புருஷர்கள் அவர்களை கண்ணியமாக நடத்தவேண்டியதாயிற்று. எனவே யுத்தம் முடிந்து சமாதானம் ஏற்பட்டதோடு, பெண்கள் வாக்கு ரிமையும் பெற்றார்கள். வாக்குரிமை பெற்றதோடு பெண்க ளுக்கு தன்னம்பிக்கையும் உண்டாயிற்று. ஆண்களோடு போட்டிபோட்டு எல்லாத்துறைகளிலும் வெற்றி பெறலாம் என்ற எதிரியமும் ஏற்பட்டது.

இன்று, இதார் அபிப்பிராயம் போலவே தன் அபிப்பிரா யமும் முக்கியமானதென்று ஒவ்வொரு புதுமைப் பெண்ணும் நம்புகிறாள். சிந்தனா சுதந்திரமும் புதுமைப் பெண் பெற்று விட்டாள். தான் பெண் என்றகாரணத்தினால் தனது அபிப்பி ராயத்துக்கு மதிப்புக்குறைவு எனறு அவள் நம்பவில்லை. புது மைப் பெண் சுதந்தரம் பெற்று விட்டதினால் அவள் இன்று வெகு சந்தோஷமாக வாழ்கிறாள். சுதந்தரம் பெற்ற புதுமைப் பெண் தன்னைச் சுற்றி யிருப்பவர்களுக்கும் சந்தோஷத்தை அளிக்கிறாள்.

பொருளாதார விஷயத்திலும் சுதந்தரமாக இருக்கப் பெண்கள் ஆற்றல் பெற்றுவிட்டதினால் அவர்களது சக்தி கொஞ்சம் கூட அதிகமாகிவிட்டது. கலியாணமாகாத பெண் கள் சுற்றத்தார் உதவியினால் காலந்தள்ள வேண்டிய நிர்ப்பந் தம் இப்பொழுது ஒழிந்து விட்டது. பருவமடைந்தவர்களுக் கெல்லாம் (ஆணாயிருப்பினும் சரி, பெண்ணாயிருப்பினும்

சரி) சுதந்தர ஜீவிதம் கடந்த உரிமையுண்டு. அத்தகைய சுதந்தர ஜீவிதம் கடந்த புதுமைப்பெண் இன்று சக்திபெற்று விட்டாள்.

தற்காலப் பெண்கள் மிக இளவயதிலேயே பெண்மைக் குணம் நிரம்பிய மாதர் ஆகி விடுகிறார்கள். இது பெண்கள் முன்னேற்றத்துக்கு ஒரு கற்குறியேயாகும். வாழ்க்கைக் கஷ்டம் தோன்றத் தோன்ற வாழ்க்கைக் கஷ்டங்களைத் தாங்கும் ஆற்றலை புதுமைப் பெண் விருத்தி செய்து கொள் ளுகிறாள். தம் பிள்ளைகளை எப்பொழுதுமே இளை யோராக மதித்து தமது பாதுகாப்பில் வைத்துக்கொள்ள அதிக பெற்றோர்கள் விரும்புகிறார்கள். ஆனால் இந்த நிலைமை தற்காலப் பெண்களுக்குத் திருப்தியளிக்க வில்லை. எனவே அவர்கள் பெற்றோர்களை மீறுகிறார்கள்; அதனால் குடும்பத்தில் பிணக்கு ஏற்படுகிறது. பெற்றோர் சம்ரக்ஷணை யிலிருந்து நீங்கி தனிக்குடித்தனம் கடந்த பெண்கள் இப் பொழுது சர்வசாதாரணமாக முன் வருகிறார்கள். அதிக மாக இது பயங்கரமானதாகவும் அருவருக்கத்தக்கதாகவும் தோன்றலாம். ஒரு பெண் தனிக்குடித்தனம் செய்வதென் றால் எல்லாரும் வியப்படையத்தான் செய்வார்கள்! அது பெற்றோருக்கு அவமதிப்பை யுண்டுபண்ணக்கூடியதாம்.

குடும்ப வீட்டிலாவது அல்லது நகரத்தில் எதேனுமொரு இடத்திலாவது தன் இஷ்டம்போல் போகவும் வரவும் வசதி யுடைய ஒரு தனி அறையை பெண்கள் வைத்துக் கொள்வதை பெற்றோர் ஆட்சேபிக்கக் கூடாது. ஆனால் அத்தகைய சுதந்தரம் வழங்குவது தற்காலப்பெற்றோருக்கு வெகு கஷ்ட மாகத்தான் தோன்றும். ஆனால் பெண்கள் நிலைமை உயர வேண்டுமானால் பெற்றோர் விட்டுக் கொடுக்க வேண்டியது தான். தனியறைகளில் வசிக்கப்பெண்களுக்குப்பெற்றோர் அனு மதி யளித்தால் மட்டும் போதாது. தனியறைகளில் வசித் துப் பழகும்படி பெற்றோரே தூண்ட வேண்டும். சுயமாக எதுவும் செய்ய 20 வயதுப் பெண்களுக்கும் கூட இப்பொழுது சக்தியில்லை. இந்தக் குற்றத்திற்குப் பெற்றோரே ஜவாப் தாரிகள். சுய நிர்ணயம் செய்து கொள்ள 20 வயதில் சக்தி பெறாத பெண்கள் 25 அலது 26 வது வயதில் எப்படி சக்தி பெற்றுவிடப்போகிறார்கள்?

சுயமாகச் சிந்தனை செய்யவும் செயலாற்றவும் பெற்றிருக் கும் ஆற்றலே புதுமைப்பெண்ணின் முக்கியமான குணம். இந்த

ஆற்றலை அவர்கள் ஒரே நாளில் பெறவில்லை. குழந்தைப் பருவம் முதல் நெடுங்காலமாகச் செய்த சிந்தனையின் பலனே இது.

குடும்பங்களில் ஏற்படும் துன்பங்களுக்கெல்லாம் குடும்ப அங்கத்தினரிடம் சுயநிர்ணய சக்தி யில்லாமையே காரணம். எனவே சுதந்தர சிந்தனையை விருத்தி செய்ய புதுமைப் பெண் இளமையிலேயே முயலுகிறாள்.

உண்மை காகரீகம் வாய்ந்த சமூக அமைப்புக்கு பெண் கள் எல்லாம் பொருளாதார சுதந்தரம் பெற வேண்டியது மிக வும் முக்கியம். பொருளாதார விஷயத்தில் அந்தியருக்கு அடி மைப் பட்டிருப்போர் உள்ளம் எப்பொழுதும் சஞ்சலப்பட்டுக் கொண்டே இருக்கும். கலியாணமாகாத பெண் சம்பாத்தியம் செய்யக் கூடியவளாயிருந்தால் சுதந்தரமாக வாழலாம். சுய மாகச் சம்பாதித்து வாழ்க்கை நடத்தும் பெண்ணுக்கு எவ ரையும் லட்சியம் செய்யத் தேவை யுண்டாகாது. அவளது இஷ்டம் போல வாழ்க்கை நடத்தலாம். தன்னைத் தானே காப்பாற்றிக்கொள்ளும் பெண்ணை எல்லாரும் கண்ணியம் செய்கிறார்கள். கலியாணம் செய்ய விரும்பாத பெண்கள் பொருளாதார சுதந்தரமுடையவர்களா யிருக்க வேண்டு மென்பது ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டது.

ஆனால் கலியாணமான பெண்கள் நிலைமை என்ன? என்பதைப் பற்றி இப்பொழுதும், மேனாடுகளிலும் கூட வா தப்பிரதிவாதம் நடந்து கொண்டே இருக்கிறது.

கலியாணமான பெண்கள் கணவன் வீட்டு அலங்கார பாத்திரமாக இருக்க வேண்டும், தன் பொழுது முழுமையை யும் தான் ஒரு கல்ல தாய் ஒரு கல்ல அடிமை எனக் காட்டிக் கொள்வதிலேயே செலவிட வேண்டுமென்பது பழையகாலக் கொள்கை. ஆனால்தாய்மைக்குணத்தைக்காட்டிக்கொள்ள அவ் வளவு அதிக காலம் தேவையில்லையென்றும், தாய்-குழந்தை சம்பந்தம்செவ்வையாக இருப்பதற்கு இதர விஷயங்களும் தே வைப்படுமென்றும் ஒருவாறாவது எண்ணுவதில்லை. இக்காளில் கலியாணத்துக்காக எந்தப் பெண்ணும் தன்வாழ்நாளைத் தத் தம் செய்வதில்லை. ஒரு குடும்பத்துக்கு தாயின் பூரா சேமும் தேவைப்பட வில்லை. தாயார் பராமரிப்பில் இலலாத குழந் தைகள் திறமையுடைய பிறர் பராமரிப்பில் இருந்து கல்ல

பிள்ளைகளாக வளருவதையும் நாம் பார்க்கிறோம். ஒன்றரை வயது முதல் ஆறு வயதுவரையுள்ள குழந்தைகளுக்கு கல்வி போதிக்கும் சிசுபாதுகாப்புப் பள்ளிக்கூடங்கள், மேனாடுகளில் தாயின் கடமைகளைச் சரிவரச் செய்து முடித்து விடுகின்றன. சிசுப்பாதுகாப்புப் பள்ளிக்கூடங்களில் குழந்தைகள் வெகு திருப்திகாமாக வளர்கின்றன. இத்தப் பள்ளிக்கூடங்களில் கல்வி பயிலும் பிள்ளைகள் பிரதினம் சில மணி நேரமே தம் பெற்றோர்களுடன் இருக்கின்றன. ஞாயிற்றுக்கிழமை மட்டும் சில சமயம பூரா நாளும் பெற்றோரிடம் இருப்ப துண்டு. வாரக்கடைசி நாளில் பெற்றோர் வெளியூர்களுக்குச் சென்றால் குழந்தைகள் சிசுப்பாதுகாப்புப் பள்ளிக்கூடங்களிலே இருக்கின்றன. எனவே சிறு குழந்தைகளுடைய தாய்மார் வேலை செய்யவிரும்பினால் குழந்தைகளை சிசுப் பாதுகாப்பு பள்ளிக்கூடத்துக்கு அனுப்பித் தன் பூரா நேரத்தையும் தன் வேலையில் செலவு செய்யலாம்.

ஒரு பெண் ஒரு புத்திசாலியான புருஷனுக்கு வாழ்க்கைப் பட்டிருந்தால் அவன் சம்பாதிப்பதினால அவனுடைய அந் தஸ்துக்கு இழுக்கு ஏற்படாது அகேக பெண்களுக்கு சுய மாகப் பணம் சம்பாதிப்பது மிக அநுகூலமாகவே இருந்து வருகிறது. லாயர்களாகவும், வைத்தியர்களாகவும் தொழில் கடத்தும் எத்தனையோ பெண்களின் குடும்ப வாழ்க்கை சுபிட்சமாகவே இருந்து வருகிறது. அகேக பெண்கள் தொழிற்சாலைகளையும், மனிகைகளையும் திறமையாக கடத்துவதுடன் குடும்ப நிர்வாகத்தையும் வெகு சாமர்த்தியமாக கடத்துகிறார்கள். தொழிற் கல்வி பெற்ற பெண்கள் கலியாணமான பிறகு தொழில் செய் யக் கூடாதென்று தடுப்பது, பொருளாதாரச் சார்பாகப் பார்த் தால் பெரிய கஷ்டமாகும். கலியாணம் செய்யும் மனிதன் தான் கற்ற தொழில் கடத்தக் கூடாதென்று மனைவி கூறினால் அதைப் பைத்தியக்காரத்தன மென்று தானே உல கம் கூறும்.

இனி, பிராய பூர்த்தி வந்த பிள்ளைகளையுடைய பெண் களின் நிலைமை கவனிப்போம். இந்தப் பெணகள், அவர் களது பாட்டிமார் 50 வருஷங்களுக்கு முன் இருந்ததுபோல் ஒன்றுக்குமுதவாத கிழங்களாயிருக்க வில்லை. அனேக மேனாட்டுப் பட்டினங்களில் 50 வயது வரைகுடும்ப வாழ்க்கை கடத்திய பெண்கள் 50 வயதுக்குமேல் தொழில் கடத்திவெற்றி

பெற்று வருகிறார்கள். ஆனால் 50 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் தொழில் செய்து கன்னிப் பெண்களுடன் போட்டி போடுவது கன்னிப் பெண்களுக்கு கஷ்டமாகவும், கஷ்டமாகவும் இருக்கலாம். ஆனால் அந்தப் போட்டியை கன்னிப் பெண்கள் தாங்கிக் கொள்ள வேண்டியதுதான். 50வயதுக்கு மேற்பட்டவர்கள் அனுபவசாலிகளாகிருப்பார்களாகையால் அவர்களையே தொழில் முதலாளிகள் பிரியப்படுவார்கள். எனவே கன்னிப் பெண்கள் முணு முணுத்துப் பயன் இல்லை. போட்டி போட்டு தன் வேலைத் திறமையினால் முதிய பெண்களைத் தோற்கடிக்க கன்னிப் பெண்கள் முயல வேண்டும்.

இயல்பாகவே எல்லாப் பெண்களும் குடும்ப விருவாகம் கடந்த சாமார்த்தியமுடையவர்களல்ல. குடும்ப விர்வாகம் எல்லாப் பெண்களுக்கும் திருப்தியான வேலையுமல்ல. அதனாலே சமையல் செய்யவும், தைக்கவும், துணி துவைக்கவும் தெரியாதவர்கள் கலியாணம் செய்யக்கூடாதென்று ஏற்படவே செய்யாது.

வீட்டு வேலை அவ்வளவு முக்கியமானதென்று புதுமைப் பெண் கருதவேயில்லை. வீட்டுவேலைகள் செய்யும் வேலைக்காரருக்கு சம்பளம் கொடுக்க தனக்கு சக்தியிருந்தால் வீட்டு வேலைகளை வேலைக்காரனைக்கொண்டு தாராளமாக கடத்து விக்கலாமென்று அவள் எண்ணுகிறாள். பிறரை அண்டி வாழப் புதுமைப்பெண் விரும்பவில்லை. தன் சுய முற்சியினால், பிறர் உதவியை நாடாமல் உயிர்வாழலாமென்ற திடநம்பிக்கை அவளுக்குண்டு.

தொழில் மிக்க வசீகாசக்தியுடையது. தொழிலில் ஒருவருக்குப்பிரியம் ஏற்பட்டுவிட்டால் அதைஎவரும் அவ்வளவுசுலுவாகவிடமாட்டார்கள். எனவேபுதுமைப் பெண்ணை ஒருவரும் குறைகூற முடியாது புதுமைப்பெண்களுக்குத்தொழிலில் சுவையேறி விட்டது. தொழில் வெற்றி கண்டும் விட்டார்கள். எனவே தொழிலைப் புறக்கணியார்கள்; பிறர் உதவியினால் உயிர்வாழ விரும்பவே மாட்டார்கள். சுய முயற்சியினால் கண்ய வாழ்க்கை நடத்தவே விரும்புவார்கள்.

பொருளாதார சுதந்திரம் பெற்ற பெண்களின் குடும்ப வாழ்வே சுபிக்ஷமாகவும் இருந்து வருகிறது. புத்திசாலியான

கோவில் உற்பத்தியான

இரகசியம்.

(பி. சிதம்பரம்.)

இந்தியாவிலுள்ள பண்டைக்கால கோவில் ஒவ்வொன்றும், வழிபடுகிறவர்களிடமிருந்து காணிக்கையாக ஏராளமான பொருளை வசூலிக்கலாமென எதிர்பார்த்த அரசர்களாலேயே ஸ்தாபிக்கப்பட்டதாகும்.

மற்றபடி எந்தக் கோவிலுமே ஆதியில் பண வருவாய் தவிர மத சம்பந்தமான குறிக்கோளுடனோ, அன்றி மோட்சத்தை உத்தேசித்தோ ஸ்தாபிக்கப்பட வில்லை. இது பொருள் தேடுவதற்குரிய அரசியல் தந்திரங்களில் ஒன்றாகும்.

இன்று அரசாங்க செலவுகளுக்காக ஜனங்களைக் கள் குடிக்கச்செய்வதுபோல அக்காலத்து அரசர்கள் கோவில்களை ஏற்படுத்திப் பொருள் சேர்த்து வந்தார்கள். இக்கொள்கை மனுஸ்மிருதிக்கு முன்னிருந்தே கைக் கொள்ளப்பட்டு வருவதாகும்.

இக்காலத்தும், அரசாங்கத்தார் அனுமதியின்றிக் குடி ஜனங்கள் கோவில் கட்டக்கூடாது என்ற முறையானது இந்திய சுதேச சமஸ்தானங்களில் கைக் கொள்ளப்பட்டு வரு

ஒரு பெண் தொழிலும் செய்து குடும்ப நிருவாகமும் கடத்த இணங்கவே மாட்டாள். இரண்டு வேலைகளையும் ஏககாலத்தில் கவனித்தால் ஒன்றிலும் வெற்றிபெற முடியாதென்று அவளுக்குத் தெரியும். சுய சுதந்திரத்துக்கும் குடும்பக்ஷேமத்துக்கும் தொழில் செய்யும் பெண்களுக்கு நியமதியான குடும்பநிருவாகம் இன்றியமையாததாகும். எனவே நல்ல வேலையாட்களை அமைத்து குடும்ப நிருவாகம் கடத்த வேண்டும்.

வதைக் காணலாம். இதிலிருந்து, முன் காலத்தில் ஆலயம் கட்டும் அதிகாரம் அரசர்களுக்கு மட்டுமே உரித்தாயிருந்தது என்பது வெளியாகின்றது.

இற்றைக்கு இரண்டாயிரத்து இருநூறு வருஷங்களுக்கு முன் கௌடில்யர் அல்லது சாணக்கியர் என்ற பெயருடன் விளங்கிய பார்ப்பனப் பெரியாரைக் கவனிப்போம். "இவர் அரசர்களை ஆக்கவும், அழிக்கவும் திறம்படைத்தவுமன்றி அரசாங்கப் பரிபாலன முறையைப் பற்றியும், மன்னர்கள், மந்திரிகள், உத்தியோகஸ்தர்கள் இவர்களுடைய கடமைகளைப் பற்றியும் விளக்கிய மிகப்பெரிய இந்தியப் பண்டிதராகவும் திகழ்ந்தார்." இவரியற்றியுள்ள சாணக்கிய சூத்திரம் அல்லது "அர்த்த சாஸ்திரம்", மனு யக்ஞியவல்கிய ஆகிய ஸ்மிருதிகளின் காலத்திற்கும் முற்பட்டதாகும்.

மூடநம்பிக்கை உற்பத்தி.

சாணக்கியரது "ராஜதந்திர"த்தைப் பற்றி அபிப்பிராயங்கள் எவ்வாறு கொள்ளப்பட்டிருந்த போதிலும், ஆலய வழிபாட்டைப் பொருத்தமட்டிலும் அவர் உண்மையையே விளம்பியிருக்கின்றார் என்பது அவரது அர்த்த சாஸ்திரத்திலுள்ள அடியிற்கண்ட சுலோகங்களினின்றும் தெளிவாகும்.

"மதஸ்தாபனங்களை மேற்பார்வை செய்யும் அரசாங்க அதிகாரி, கோட்டை கொத்தளங்களுள்ள நகரங்களிலும் கிராமங்களிலுமுள்ள தெய்வங்களுக்குச் சொந்தமான பலவித சொத்துக்களையும் ஓரிடத்தில் சேகரித்து, அரசரது பொக்கிஷத்திற்குக் கொண்டுபோய் விடலாம்."

"அன்றியும், ஓரிராவு ஒரு தெய்வத்தையோ, பீடத்தையோ, மடத்தையோ, ஏற்படுத்த வேண்டியது; அல்லது ஒரு கெட்ட சகுனத்தைக்காட்டி (தீமைகள் கோரிடாவண்ணம் தடுக்கும் பொருட்டு) திருவிழாக்களும் கூட்டங்களும் கூடத்துவதாகப் பாசாங்கு செய்து பொதுஜனங்களிடமிருந்து அரசரது செலவுக்காகப் பணம் வசூலிக்கலாம்."

அரசருடைய செலவுகட்காகப் பணம் திரட்டும் வினோதமான வழிகளை இன்னும் பார்ப்போம்.

"ஒரு மரத்தில் பிசாசு தோன்றிவிட்டதாக முதலாவது பொதுஜனங்களிடையே பீதியை உண்டுபண்ணி விட வேண்டும். இந்த மரத்துக்குள் ஒருவனை நுழையச் செய்து, பயங்காமான பேய்க்கூச்சலிடும்படியாக அரசன் ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த துஷ்ட தேவதையைச் சாந்தப்படுத்தி அனுப்பாவிட்டால் ஜகாத்துக்குப் பெருங்கேடு விளையுமென்று ஜனங்கள் கம்பி, அதைச் சாந்தப்படுத்த அவர்கள் முயலும்படி செய்யவேண்டும். அரசரது ஒற்றர்கள் சந்நியாசிகள் மாதிரி வேடம் பூண்டு இந்தத் தந்திரத்தைச் செய்து பணத்தை வசூலிக்க வேண்டியது." பிசாசு ஜகாத்தை விட்டுப் யோய்விடுகிறது: பணம் அரசரது பொக்கிஷத்திற்குச் சேர்கிறது. அந்தக் காலத்தில் அரசனுக்குப் பணம் தேடிக்கொடுக்கும் வேலை, அதிகாரிகளுக்குக் கடுமையான வேலையாகவே இருந்திருக்க வேண்டும்.

பாம்பைக்காட்டிப் பணம் பறிக்கும் தந்திரம் இதைவிட விசித்திரமானது; இது இன்றுங்கூடச் சிறிது மாற்றத்துடன —ஒரு கோவிலிலாவது—இருந்து வருவதாகத் தெரிகிறது. சாணக்கியர் காலத்தில் 'தீர்த்தம்' எவ்வாறு பயன் படுத்தப்பட்டிருக்கு மென்பதை எளிதாக உணர்ந்து கொள்ளலாம். சாதாரணமாக எளிதில் இம்மாதிரி விஷயங்களை நம்பாத மக்களிடத்தில் தான் இந்த 'தீர்த்தம்' உபயோகிக்கப்பட்டது. இதை அவர்களுக்கு நம்பிக்கையூட்டும் 'மருந்'தாக உபயோகித்தார்கள். ஆனால், இந்த தந்திரங்களையெல்லாம் அரசருடைய காரியத்துக்காக உபயோகித்தார்களேயன்றி இன்று நடப்பது போல ஒரு சிலருடைய சுயநல வாழ்வுக்காகவன்று என்பதை ஞாபகத்திலிறுத்திக் கொள்ளவேண்டும். தந்திரம் இரண்டும் ஒன்றுதான்.

"பார்ப்பான், தன்னலத்தையும் ஆதாயத்தையுங் கருதி, கோவிலில் வழிபடுகிறவர்களை ஏமாற்றிப் பணம் பறிக்க எவ்வித தந்திரத்தையும் உபயோகிப்பான்" என்று பிரஞ்சுப் பாதிரியாரான கற்றறிந்த ஆபிடுபாய் ஒரு நூற்றாண்டுக்குமுன் எழுதியிருக்கிறார். மேலும் சாணக்கியர் கூறுவதாவது:—

அற்புதங்கள் உற்பத்தி

"அரசனது தோட்டத்தில் ஏதாவது ஒரு மரம் அகாலமாகப் பூக்கவோ, காய்க்கவோ செய்திருந்தால் அதில் கடவுள்

தோன்றி யிருக்கிறார் என்று பொதுஜனங்களிடம் காட்டிப் பிரசித்தப்படுத்த வேண்டும்.''

''அல்லது, ஒரு கிணற்றில் அனேக தலைகளையுடைய பாம்பு ஒன்றிருப்பதாகப் சொல்லி அதைப் பார்க்க வருபவர் களிடமிருந்து ஒற்றர்கள் பணம் வசூலிக்கலாம்.''

''ஒரு பாம்பு விக்கிரகத்தில் துவாரமிட்டோ, அல்லது கோவிலின் இருட்டு மூலையிலோ, அல்லது ஏதாவது பொந் திலோ, பசியால் வாடிக்கிடக்கும் பாம்பொன்றை வைத்து, ஜனங்களைப்பார்க்கச் சொல்லிப் பணம் வசூலிக்கலாம். இம் மாதிரித் தந்திரங்களை எளிதில் நம்பாத ஜனங்களுக்கு மயக்க மருந்து கலந்த நீரைத் தீர்த்தமென்றும், பிரசாதமென்றுஞ் சொல்லிக் குடிக்கும்படி செய்து, அவர்கள் குடித்து மயங்கிய வுடன், அதற்குக் காரணம் கடவுள் கோபமென்றும் சொல்ல வேண்டியது. அல்லது தாழ்ந்த சாதியானொருவனைப்பாம்பு கடிக்கும்படி செய்து, இம்மாதிரி துர்ச்சகுனம் நேரிடாது தடுக்கப்போவதாகப் பாசாங்கு செய்து ஒற்றர்கள் பணம் வசூ லிக்கலாம்.''

தெய்வங்களுக்குச் சமர்ப்பிக்கப்படும் காணிக்கைகள் அரசனது பொக்கிஷத்தைச் சேர வேண்டும்! அரசனது செல வுக்காக, அரசன் வாழும்பொருட்டுப்பணம் வசூலிக்கஓர் இர விவில் தேவதைகளையும்,பீடங்களையும்ஸ்தாபித்துத்திருவிழாக் கள் நடத்த வேண்டும்! காணிக்கைகளைப் பெறுவதற்காகக் அடிக்கடிகடவுள்கள் தோன்றும்படி செய்யவேண்டும்! ''சாதா ரணமாக மிக வெளிப்படையான தந்திரங்கள் தான் அதிக மான பலனை அளிக்கின்றது. கடவுள் தம் மூலம் பேசுவதா கப் பாசாங்கு செய்து பணம் பிடுங்கும் வழி முன் காலத்தில் மற்ற நாட்டுப் புரோகிதர்களால் கையாளப்பட்டு வந்தது. ஆனால் இந்தியாவில் இன்றும் இவ்வழக்கம் ஓயவில்லை. இங்கு விக்கிரகங்களே பேசுகின்றன. இவற்றை வழிபடுகிற வர்கள் மிகக் கவனமாகக் கேட்டு பரவசமடைகிறார்கள்; ஆனால் கல் விக்கிரகத்தின் உள்ளோ, பக்கத்திலோ வஞ்சகனொரு வன் மறைந்திருந்து விக்கிரகத்தின் வாய் வழியாகப் பேசுகின்றான் என்பதை இவர்கள் அறிவதில்லை''யென்று ஆபிபோய் கூறு கின்றார். இவை போன்று இன்னளவும் கையாளப்பட்டு வரு கிற பலவித தந்திரங்களையும் அவர் விரிவாக விளக்குகிறார்.

கோவில் மூலம் வியாபாரம்:

இனி, நமது சாணக்கியரைக் கவனிப்போம். சாணக்கியர் காலத்தில் கோவில் வருவாயிலிருந்து ஒரு பைசாவாவது அரசனது பொக்கிஷத்தைச் சேரத் தவறினால், அந்த இடத்திலேயே கோவில் அதிகாரி என் தூக்கிலிடப்பட்டிருப்பார் என்பதை நாம் மேற்சொன்னவற்றிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

அது மிகவும் நியாயமே. ஏனெனில் அக்காலத்தில் 'விக்கிரகங்களும், பீடங்களும்' அரசனது வியாபாரத்திற்காக ஏற்பட்டவைகளாகும். பொதுஜனங்களின் பணத்தை, அதாவது அரசனது பணத்தைச் செலவிட்டே விக்கிரகங்களையும், பீடங்களையும், மடங்களையும், கோவில்களையும் உண்டுபண்ணி, பரிபாலித்து அவற்றைப்பற்றிப் பெரிதாக விளம்பரப்படுத்தியும் வந்தார்கள். இக்காலத்தில் அரசாங்கத்தார் எவ்வாறு பெரும்பொருள் செலவிட்டு மேட்டூர் தேக்கத்தையும், சுக்கூர் அணைக்கட்டையும் கட்டி, அவற்றினின்றும் லாபத்தை எதிர் பார்க்கின்றார்களோ, அதேபோல முன்காலத்து அரசர்கள் கோவில்களை உற்பத்தி செய்ததும் லாபத்தைக் கருதியேயாகும்.

இம்மாதிரி 'மதஸ்தாபனங்க'ளை ஏற்படுத்திய முற்கால மன்னர்களைச் சுற்றி விரோதிகள் எப்பொழுதும் இருந்து வந்ததால் இடைவிடாது யுத்தங்கள் கேரிட்டுக கொண்டேயிருந்தன; இதற்காக அவர்கள் பெருஞ் சேனைகளை வைத்திருந்தனர். யுத்தங்களுக்கும், சேனைகளுக்கும் வேண்டிய பணத்திற்காக ஏராளமான வருவாய் தேவைப்பட்டது. கோவில் வருவாயைக்கொண்டு பார்ப்பனருக்கு மட்டும் சோறு போடுவது என்றிருந்தால், அரசும் கோவிலும் அன்றே மறைந்திருக்கும். இக்கோவில்களையும், பீடங்களையும், கடவுள்களையும் படைத்த அக்காலத்து அரசர்களுக்கு அரசாங்கத்தை நடத்தும் கஷ்டம் எவ்வளவு என்று தெரியும். உதாரணமாக, பூரண மதுவிலக்கு ஏற்பட்டால், நாட்டில் உயர்தரக் கல்வியை நிறுத்த நேரிடுமென்று இன்று நமது மந்திரிகள் சொல்வதுபோல, தங்களது க்ஷேமமும், ராஜாங்கத்தின் க்ஷேமமும் கோவில் வருமானத்தில் தொங்கிக்கிடந்தன வென்பதை அக்காலத்து அரசர்கள் அறிந்திருந்தார்கள். ஆதலால் அவர்கள் அதன் மீது மிகுந்த கவனஞ் செலுத்தி

வந்தார்கள். இவ்வுலக சுகத்துக்கங்களைக் குறித்து அவர்கள் நினைத்தார்களேயன்றி மோக்ஷ லோகத்தைப்பற்றி நினைக்க வில்லை. இக்காலத்து சுதேச மன்னர்களில் பெரும்பாலோர் யாதொரு பொறுப்பும் கவலையுமில்லாதது மோக்ஷ லோகத் தைப்பற்றி நினைக்கின்றார்கள். ராஜப்பிரதிநிதியைத் திருப்தி செய் தால் மோட்சத்துக்குச் சீட்டுக் கிடைத்துவிடுமென நம்புகிறார் கள். அங்ஙனம் செய்துவிட்டு, தங்கள் ராஜ்யங்களை விட்டு, தற்காலை மோட்ச பூமியான பாரிஸ் முதலிய மேனாடுகளுக்குச் சென்று விடுவதுமுண்டு.

மன்னர்கள் யோக்கியதை.

ஸர். கே. எம். பணிக்கர் அவர்கள் "இந்திய சமஸ்தா னங்களும், இந்திய அரசாங்கமும்" என்ற தமது புத்தகத்தில் அடியில் வருமாறு எழுதுகிறார்.

"பல சிற்றரசர்கள் மிதமிஞ்சிய சுகபோகங்களுடன் இழி வான வாழ்க்கை வாழுவதற்குக் காரணம் அவர்கள் ராஜ்ய பாரத்தில் நேரடிப் பொறுப்பேற்று நடத்தாததே யாகும். முன் காலங்களில், குடிகளைத் துன்புறுத்தும் கொடுங்கோல் மன்னனையும், தனது சுகமொன்றையே கருதும் துர்நடத் தைக்காரரையும் சும்மாவிட்டு வைத்திருக்க மாட்டார்கள். வெளியிலிருந்தேற்படும் படையெடுப்போ, அன்றி உள்நாட்டுக் கலகமோ அவனது வாழ்க்கையை முடித்து விடும். ஆனால் இக்காலத்தில் அப்படியல்ல. ஒரு அரசன் தான் பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு செய்து கொண்ட உடன்படிக்கையை மீறா திருப்பது வரையும், நேரடி ஆசாரங்களை வெளிப்படை யாகப் புறக்கணியாதிருப்பது வரையும் அவனுக்கு பிரிட்டிஷ் அரசாங்கத்தார் ஆதரவிருக்கின்றது. அவன் தனது சுக போகங்களுக்காகத் தன் இஷ்டம் போல் பொக்கிஷத்தை உப யோகிக்கவும், குடிகளைக் கொள்ளையடிக்கவும் விட்டு விடு கிறார்கள்."

ஸர் தாமஸ் மன்ரோவின் அடியிற்கண்ட குறிப்புகளை யும், திரு. பணிக்கர் அவர்கள் எடுத்துக் கூறுகிறார்:—

"இந்தியாவில் மோசமான ராஜ்யபாரம் ஏற்படுமாயின், அரண்மனையில் புரட்சி உண்டு பண்ணியோ, அல்லது உள் நாட்டுக் கலகத்தாலோ அதைச் சரிப்படுத்துவது தான் வழக்

கம். ஆனால் உள்காட்டு வெளிகாட்டு விரோதிகளினின்றும் மன்னனைக் காப்பாற்ற பிரிட்டிஷ் படைகளிருப்பதால், அவ் விதம் கொடுங்கோன்மையைப் பரிகரிக்கும் வழி யெதுவுமில் லாமற் போய் விடுகின்றது. தனது பாதுகாப்புக்கு அன் னியர் உதவி யிருக்கின்றதென்ற கம்பிக்கையால் அவன் சோம் பேறியாய் விடுகின்றான்; தனது குடிமக்களுடைய வெறுப்பு தன்னையொன்றுஞ் செய்ய முடியாதென்ற எண்ணத்தால் அவன் கொடியவனாகவும், போராசை பிடித்தவனாகவும் ஆய் விடுகின்றான்.''

கோவில்களிலிருந்து தனக்குப் பணம் வந்துகொண்டே யிருக்க வேண்டும் என்பதொன்றையே அரசன் கவனித்தான் என்பது இதுகாறும் எடுத்துக் காட்டியவற்றிலிருந்து விளங் கும். யார் பணம் கொடுத்தார்கள்; யார் கோவில்களுக்குப் போய் வணங்கினார்கள். யார் மதுவருந்தினார்கள் என்ப தைப்பற்றியெல்லாம் அவன் கவனித்ததில்லை. இவர்கள் சண் டாளராகவும், சூத்திராகவும், வைசியராகவும், க்ஷத்திரியரா கவும், பிராமணராகவுமிருக்கலாம். சண்டாளனாகவிருந்தா லும், அவன் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகப் பணங்கொடுக் கிறானோ அவ்வளவுக்கவ்வளவு அரசனும் திருப்தியடைந்தி ருப்பான். பணம் வருமென்று தெரிந்தால், அரசன் தனது விக்கிரகங்களையும், பீடங்களையும், ஸர்ப்பங்களையுங் கொண்டு சண்டாளருக்கு விசேஷ வேடிக்கைகளையுங் காட்டி யிருப்பான். ஒரு சண்டாளன் தனது கோவிலுக்குள் நுழை யவோ, விக்கிரகத்தையோ, பாம்பையோ, மரத்தையோ வணங் கவோ செய்யவொட்டாமல் ஓர் வர்ணாச்சிரமதர்மி தடுப்பதி னிமித்தம் தனக்கு நியாயமாக வரவேண்டிய வருவாய் தடைப் படுவதாகத் தனது காதுக்கு எட்டினால், இம்மாதிரித் தடை செய்பவர்கள் பார்ப்பனராக இருந்தபோதிலும், இவர்களைச் சமீபத்திலிருக்கும் மரத்தில் கட்டித் தூக்கியிருப்பான்.

அக்காலத்தில் இந்துக் கோவில்கள் அரசனுடைய வரு வாய்க்கு அவ்வளவு தூரம் மூலகாரணமாயிருந்தன. ஆகவே எக் காரணத்தைக் காட்டியேனும், இவன் சண்டாளன், இவன் தாழ்ந்த சாதி ஆகையால் கோவிலுக்குள் போகவோ, வணங் கவோ கூடாதென்று யாரேனும் சொன்னால், அவன் அந்த இடத்திலேயே கொடிய ராஜத்துரோகக் குற்றஞ்செய்தவனா கக் கருதப்பட்டிருப்பான்.

கோவில் பொதுச் சொத்து

கோயில்கள் அரசாங்க ஸ்தாபனங்களாக இருந்தன; ஏதேனும் ஒரு ஸ்தாபனம் 'பொதுச் சொத்து' என்று சொல்லக் கூடியதாக இருந்திருந்தால் அது இந்தக் கோயில்களாகும். இப்பொழுது உயர் சாதி இந்து வக்கீல்கள் கோயில்களைப் 'பொது ஸ்தாபனங்கள்' என்று சொல்லும்போது ஒரு புதுமாதிரியான விசேஷ அர்த்தத்துடன் சொல்லுகின்றார்கள். "பிரதம திருஷ்டியில், நான்கு ஜாதியாருக்கும் தட்டுத்தடையின்றி இக் கோயில்களில் பிரவேசித்து வழிபட உரிமையுண்டு" என்பது இவர்கள் கூற்றாகும். கோயில்களையும், தெய்வங்களையும் ஸ்தாபித்தவர் பார்ப்பனர்கள் அல்லவென்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

"வேதங்களை அடிப்படையாகக் கொண்ட ஆரிய மதத்தில் விக்கிரக ஆராதனையில்லை. இது பின்னர் தோன்றிய இழிவுபட்ட ஆராதனையாகும்" என்று காலஞ் சென்ற மாக்ஸ் முல்லர் என்னும் உலகப் பிரசித்திபெற்ற மேனாட்டு ஆசிரியர் கூறுகின்றார்.

வங்காள தேசத்துப் பிரபல வழக்கறிஞரான மிஸ்டர் ஜே. ஸி. கோஷ் தமது தாகூர் சட்டப் பிரசங்கத்தில் அடியில் வரு மாறு குறிப்பிடுகிறார்:—

"மக்கள் யாகம் முதலியவற்றை கடைத்தி வந்த காலத்தில் கோயில்களையும், விக்கிரகங்களையும் ஸ்தாபிக்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. பிராமணர்கள் மட்டுமே அக்கினியை வளர்க்கலாம். இதனால் அவர்களை "அக்கினி ஹோத்திரிகள்" என்றழைத்தார்கள். மற்ற சாதியாரும் உயர்ந்தபோது அவர்கள் வழிபடத் தெய்வங்கள் வேண்டிய தாயிற்று. பிராமணரது ஆதிக்கம் குறையவும், அக்கினி வணக்கம் தனது செல்வாக்கை இழந்தது; இதினிருந்து விக்கிரக வணக்கம் ஆரம்பமாயிற்று. இந்த விக்கிரக ஆராதனை, ஆரியர் வருமுன் இந்தியாவில் இருந்தவர்களிடமிருந்தும், பழங் குடிகளான திராவிடர்களிடமிருந்தும் கடன் வாங்கப் பட்டிருக்கவேண்டும். மற்றும் புத்த விக்கிரகங்களையும், ஸ்தூபிகளையும் ஸ்தாபித்து புத்த மதத்தினர் வழிபடவாரம்பித்தது, இந்துக் கோயில்களையும், விக்கிரகங்களையும் ஸ்தாபிப்பதற்குத் தூண்டுகோலாயிற்று."

"விக்கிரகங்களையும், கோயில்களையும் ஏற்படுத்திய போது, அவற்றைப் பரிபாலிக்க சொத்துக்களை விடவேண்டியதும் அவசியமாயிற்று. எனவே, நிலங்களை விட்டதுமன்றி பல பழைய கோயில்களில் (அடிமைப்பெண்களையும்) தாசிகளையும் விட்டார்கள். இதிலிருந்து இந்திய வில் எனேநேக்கத்துடன் விக்கிரக ஆராதனை ஆரம்பிக்கபட்டதுஎன்பது புலனாகும். இப்பொழுது ஒவ்வொரு கோயிலும் கடனாளியிருப்பதாகவே கருதப்படுகிறது" என்று மிஸ்டர் கோஷ் சொல்லுகிறார்.

பண்டைக்காலத்தில், இக்காலத்திலிருப்பது போலவே, கோயில்கள் வேடிக்கை வினோத ஸ்தலங்களாகவே யிருந்து வந்தன; இவ்வுத்தேசத்துடன் தான் அக்கால அரசர்களும் ஆலயங்களை ஏற்படுத்தியிருந்தார்கள். எனவே "இக்காட்டிலிருக்கும் பல கோயில்கள் வேசையர் விடுதிகளைவிடச் சிறந்தவையல்ல" வென்று காந்தியார் குறிப்பிட்டது சரித்திரப்படியும் மிகையாகாது. இக்கோக்கத்துடனேயே ஆலயங்களை ஸ்தாபித்தார்கள் என்பது சரித்திர பூர்வமான உண்மையாகும்.

மதுபான வியாபாரம்.

எவ்வாறாயினும், சாணக்கியர் காலத்தில்— அதாவது கி. மு. 300-வது ஆண்டில்—"பீடங்கள், விக்கிரகங்கள் முதலிய மத ஸ்தாபனங்களுக்கும், சகல சாதி ஆண், பெண், குழந்தைகளுக்கு மதுவளித்து வந்த ஸர்க்கார் கள்ளுக்கடைகளுக்கும்" அக்காலத்து அரசர்கள் யாதொரு வித்தியாசமும் எற்படுத்தினரில்லை. இந்த இரண்டு அரசாங்க இலாக்காக்களும் தனித்தனி அதிகாரிகளால் நிர்வகிக்கப்பட்டு வந்தன. ஒரு அதிகாரி தேவஸ்தான சூப்பிரண்டண்டு என்று அழைக்கப்பட்டு வந்தார்; மற்றவர் மதுபான சூப்பிரண்டண்டு என அழைக்கப்பட்டு வந்தார். இந்த இரு ஸ்தாபனங்களையும் தாரதம்மியப்படுத்தி ஆராய்ச்சி செய்வது வேடிக்கையாகவும் அறிவு புகட்டுவதாகவுமிருக்கும்.

இந்த அரசாங்க சாராயக்கடைகளை நிர்வகிக்கும் விஷயமாக சாணக்கியர் வகுத்துள்ள சட்டதிட்டங்கள் எவை யென்பதை ஆராய்வோம். இவை காலத்துக்கு தக்க விதத்தில், போதிய திறமையுடன் ஏற்படுத்தப்பட்டு மிக வெற்றிகரமாக நிர்வகிக்கப் பட்டு வந்தன. இதைப் பின் பற்றியே ஆலய இலாகா

விலும் பல சீர்திருத்தங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று தெரிகிறது.

"மது வகைகளைத் தயாரிக்கும் முறை தெரிந்தவர்களை வேலைக்கமர்த்தி கோட்டைகளிலும், காட்டுப்புறங்களிலுமென்றி, முக்கியமான போடுமிடங்களிலும் மது விற்பனை செய்ய வேண்டியது கள்ளுக்கடை அதிகாரியின் கடமையாகும்.

மது வியாபார முறை.

"தேவைக்கும் செலவுக்கும் தக்கபடி, கள்ளை ஒரு இடத்தில் தயாரித்துப் பல இடங்களிலும் கொண்டு போகவோ, அல்லது பல இடங்களிலும் தயாரித்து ஆங்காங்கு விற்கவோ செய்யலாம்.

"சாராயத்தை அந்தந்தக் கிராமத்திலிருந்து வெளியே கொண்டு போகக் கூடாது; அடுத்தடுத்தும் கடைகளை ஸ்தாபிக்கக் கூடாது.

"மீறி நடப்பவர்கள் மீது 100 பணம் அபராதம் விதிக்கப் படும்.

"வேலையாட்கள் கெட்டுப்போகாமலிருக்கவும், ஆரியர்கள் தங்கள் யோகியதையையும் நன்மதிப்பையும் இழக்காமலிருக்கவும், துஷ்டர்கள் புத்திகெட்ட செய்கைகளைச் செய்யாமலிருக்கவும், தெரிந்தவர்களுக்கு மட்டுமே சாராயம் சிறிதளவில் விலைக்குக் கொடுக்கப்படவேண்டும். நன்றாகத் தெரிந்தவர்களும், நன்னடத்தையுடையவர்கள் மட்டுமே சாராயத்தைக் கடைக்கு வெளியே கொண்டுபோகலாம்.

"அல்லது, எல்லோரும் கடையிலிருந்துதான் சாராயம் குடிக்கவேண்டுமென்றும், உடனேயே வெளியே போய்விடக் கூடாதென்றும் கட்டுப்பாடு செய்யலாம்.

"கெட்டுப்போன சாராயத்தை மன்றிப் புதிய சாராயத்தை அதன் விலையிலிருந்து குறைத்துக் கொடுக்கக் கூடாது. கெட்டுப்போன சாராயத்தை வேறெங்காவது விற்கவோ, அடிமைகளுக்குக் கொடுக்கவோ, சம்பளத்திற்குப் பதிலாக வேலை

யாட்களுக்குக் கொடுக்கவோ, அல்லது பன்றி முதலிய மிருகங்களுக்குக் கொடுக்கவோ செய்யலாம்.

மது வினியோக முறை.

"சாராயக் கடைகளில் தனித்தனி இருக்கைகளும், படுகைகளும் உடைய பல அறைகளிலிருக்க வேண்டும். குடிக்கும் அறையில் வாசனைத் திரவியங்கள், புஷ்ப மாலைகள், தண்ணீர் முதலிய பல சௌகரியமான சாமானங்களை வைத்திருக்க வேண்டும்.

"இந்தக் கடைகளுக்கு வரும் குடிகாரர்கள் செய்யும் செலவு கிரமமானதா, கிரமத்துக்கு மிஞ்சினதா என்பதையும், அன்னியர்கள் யாராவது இருக்கின்றார்களா என்பதையும் ஒற்றர்கள மறைந்திருந்து கவனிக்க வேண்டும். மது மயக்கத்தில் கிடப்பவர்களணிந்துள்ள ஆடை, ஆபரணாதிகளின் விலை மதிப்பையும் அவர்கள் கவனிக்க வேண்டும்.

"குடிக்க வருபவர்கள் எப்பொருளையாவது இழக்க நேரிட்டால், இழந்த பொருளுக்குப் பதிலுக்குப் பதில் சாராயக்கடை வியாபாரிகள் கொடுப்பதோடு, அதைப்போன்று ஒரு பங்கு அபராதமும் செலுத்த வேண்டும்.

"மதுவருந்தித் தம் அழகிய வைப்பாட்டிகளுடன் தூங்கும் உண்மையான அல்லது போலி ஆரியர்களின் தோற்றத்தை சாராயக்கடை சொந்தக்காரர்கள் பார்த்து மூடியிருக்கும் அறைகளில் ஒளித்திருந்து கவனித்துக் கொள்ள வேண்டும்." இவை சாணக்கியர் வகுத்துள்ள சட்டங்கள்.

விக்கிரகங்களையும், ஆலயங்களையும் விட அரசாங்க சாராயக்கடைகளே மிகவும் பழமையான ஸ்தாபனங்கள் என்பதை வருணாச்சிரம தர்மிகள் ஒப்புக் கொள்ள வேண்டும். இன்று இந்தியாவிலிருக்கும் எத்தஸ்தாபனத்தையும் "பண்டையப் பழக்க வழக்கம்", "முன் கடப்பு" என்ற காரணத்தைக் கொண்டு மட்டும் நிலை நிறுத்த வேண்டுமென்றிருந்தால் இப்பொழுது கடைமுறையிலிருக்கும் "பூரண மதுவிலக்குப் பிரசார"த்தை விட அதற்கு ஆபத்தைத் தரக்கூடியது வேறொன்றுமேயில்லை. சாணக்கியர் காலத்தில் இவ்விதப் பிரசாரம் மிக மிகப் பெரிய ராஜத்துரோகமாகக் கருதப்பட்டிருக்கும். இனி மிற்க,

சாணக்கியர் காலத்தில் சகல ஜாதி ஆண்களுக்கும், பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் அரசாங்கத்திலிருந்தே புதிய சாராயம் கொடுக்கப்பட்டது என்பதைக் கவனிக்கவேண்டும்; அவரவர் சக்திக்கும், திருப்திக்குத் தக்கபடி சாராயம் அளிக்கப்பட்டது. விலை மிக நியாயமானது. 'தூய குணமுடைய ஆரியர்'க்குக்கூட அதிகக் கஷ்டமில்லாமல் கிடைக்கும். இந்த சாராயக்கடைகளில் தனிச் சாப்பாட்டு அறைகளுமிருந்தன. இவை மட்டுமா? பருவ கால மாற்றத்துக்குத் தக்கபடி சௌகரியமான சாமானங்கள்! இவற்றுடன் வாசனைத திரவியங்கள், பூமாலைகள், தண்ணீர்! இவையெல்லாவற்றையும்விட, யாரையும் கவரத்தக்க "அழகிய விலைமாதர்கள்"! இவற்றையெல்லாம் மதுபான இலாகாத் தலைவர் ஏற்பாடு செய்யவேண்டும். ஒருவர், ஆரியராயினுஞ் சரி, அனாரியராயினுஞ் சரி, இவற்றைத் தவிர அவருக்கு வேறென்ன வேண்டும்?

கோவிலும், கள்ளும் ஒன்றே.

ஒரு காலத்தில், இந்த அரசாங்க "சாராய ஸ்தாபனங்க"ளுடன் அரசாங்க "மதஸ்தாபனங்க"ளும் ஒன்று சேர்க்கப்பட்டிருக்க வேண்டுமென்பது சாணக்கியர் கூற்றிலிருந்து வெளிப்படுகிறது. சாராயக்கடைகளிருக்க "அழகிய விலைமாதர்கள்" ஆலயங்களிலும் இருக்கவேண்டும். "புஷ்பங்கள், பூமாலைகள், வாசனைப் பொருள்கள்" இரண்டிலும் கிடைக்கும். மதுவை எந்தெந்தப் பொருள்களைக் கொண்டு தயாரித்தார்களோ அதே பொருளைக் கொண்டே ஆலயத்திலுள்ள "தீர்த்த"மும் தயாரிக்கப்பட்டது. சாராயக் கடைகளுக்குச் செல்வதால் யேதக்கியதைக் குறைவு ஏற்படுமென்று 'தூயகுணமுடைய ஆரியர்'க்கு ஏற்பட்ட பயமும், கோயில் "தீர்த்த"மாக இந்த மது பரிணமித்ததினிமித்தம் நீக்கப்பட்டுவிட்டது. இன்றளவும் எவ்வாறு ஒழுக்கத்தைக் காப்பாற்ற மதம் உபயோகிக்கப்படுகின்றதோ அதே முறையில் அன்றும் ஒழுக்கத்தைப் பாதுகாக்க மதத்தையே உபயோகித்தார்கள்.

கோவிலும் பார்ப்பனரும்.

இவ்விதம் ஆபாசங்களினால், அக்கினி தேஜோதிரிகளாக இருந்த பார்ப்பனர்களைக் கோயிலுக்குள் கொண்டு வந்தார்கள். இவ்வாறு கோயிலுக்குள் சென்று வணங்கிய பார்ப்ப

னரை மற்ற பிராமணர்கள் ஜாதிப்பிரஷ்டஞ் செய்தார்கள். பொதுவாகவே, பிராமணன் வராத கோவிலுக்குக் கவுரவ மில்லை என்ற எண்ணம் பார்ப்பனரல்லாதாருக்குண்டு; அந்த கவுரவத்தை உண்டுபண்ணும் பொருட்டே, பார்ப்பனருக்கு இவ்வளவு சௌகரியங்களையுஞ் செய்து கோயிலுக்குள் அழைத்து வந்திருக்கக்கூடும். பார்ப்பனரும், ஜாதிப்பிரஷ்டஞ் செய்யப்படுவதையும் பொருட்படுத்தாது, இவ்வித சௌகரியங்களில் மயங்கி ஆலய வழிபாட்டிற்கு இணங்கியிருக்க வேண்டும். எனவே, இவ்விதம் ஜாதியிழந்த, கீழ்நாப் பார்ப்பனர்களுக்கு, அவர்கள் கோயிலுக்குள் நுழைந்து வணங்கிய காரணத்தால, அவர்களுக்கும், தாசிகள், சங்கீதக்காரர்கள் இவர்களுடன் உணவுக்கும், செலவுக்கும் சொத்துக்கள் விட வேண்டியதாயிற்று.

ஆகையினால், பண்டைக்காலத்தில் பொது ஜனங்களைத் திருப்திப்படுத்தவும், தங்களது வருமானத்தைக் கருதியுமே அரசர்கள் இக்கோவில்களை ஸ்தாபித்தார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க நியாயமில்லை.

பின்னர், இக்கோவில்களுக்குள் தாசிகளையும், சங்கீதத்தையும் கொண்டு வந்து, வருமானந்தரும் வினோத காட்சி சாலைகளாக்கினார்கள். இவற்றிற்கு சமூக மதிப்பு ஏற்படும் பொருட்டு சில பிராமணர்களையும் வணங்கும்படி செய்தார்கள். அவ்விதம் வணங்க முன் வந்த பிராமணர்கள் தங்கள் ஜாதியை இழக்க நேர்ந்தமையால், அவர்களுக்கு உணவளிக்கவும் ஏற்பாடு செய்தார்கள்.

இச்சந்தர்ப்பத்தில், பிரஞ்சுப்பாதிரியாரான ஆபி டுபாயின் குறிப்புகளைக் கவனிப்போம்:—

"வேசையுடனோ, கன்னிகையுடனோ சம்பந்தம் வைத்துக் கொள்வது குற்றமாகப் பார்ப்பனர் கண்ணுக்குத்தோன்றவில்லை. மாமூலுக்கு விரோதமாகச் சிறிதளவு மாறினால் கொடிய குற்றமாகக் கருதும் இப்பார்ப்பனர்கள், எவ்வளவோ கொடிய தூர்த்தத்தனமான செய்கைகளிலும் குற்றங் காண்பதில்லை. முக்கியமாகப் பார்ப்பனரின் உபயோகத்திற்காகவே,

ஆதியில் தேவதாசிகளையும், பரத்தைர்களையும்கோவில்களில் ஏற் படுத்தினார்கள். இவர்கள் அடிக்கடி 'வேசியதர்சனம்புண்ணியம், பாபநாசம்' என்ற சுலோகத்தைச் சொல்விக்கொள்வதைக்கேட் கலாம். 'வேசியையைத் தரிசித்தால் பாவம் போய் புண்ணியம் ஏற்படும்' என்பது இதன் பொருளாகும்.

ஆதியில், கோவிற் பரத்தையர்களும், நடனமாதர்களும், தேவதாசிகளும், பார்ப்பனர் சுகபோகத்துக்காக மட்டுமேதனிப்பட ஒதுக்கப்பட்டிருந்தார்கள் என்று தெரிகிறது. ஒரு பிரத்தியேக முறையில் இல் வினைமாதர்கள் பொட்டுக்கட்டப்படுகிறார்கள். ஒவ்வொரு முக்கியமான கோவிலும் எட்டு, பன்னிரண்டு அல்லது கூடுதலான தேவதாசிகளிருக்கின்றனர். இவர்கள் தினந்தோறும் இருமுறையும், திருவிழாக் காலங்களிலும் ஆடல் பாடல் நிகழ்த்தவேண்டும்."

இன்றளவும் பிராமணர்களுக்கும் தேவதாசிகளுக்குமி ருக்கும் அதிசயத்தக்க சம்பந்தம் இனினின்றும் சரித் திர பூர்வமாக வெளியாகின்றது. தேவதாசி முறையை ஒழிக்க வேண்டுமென்று சீர்திருத்தக்காரர்கள் முயலும்போது, அதை எதிர்க்கும் பிராமண மேதாவிகளின் வைதீக ரகசியம் இதிலி ருக்கு புலனாகின்றதல்லவா? இதை முன்னிட்டேபோலும், திருவிதாங்கூர் அரசாங்கத்தார் கோவில்களில் தேவதாசி முறையை ஒழித்தபோது, அவ்வேலைகள் பிராமணர்களுக்கே கொடுக்கப்பட வேண்டும் என்று கட்டளையிட்டார்கள்

"கொனிதுவரை எற்பட்ட சீர்திருத்த ஸ்தாபனமாகிய பெரிய கப்பல்களெல்லாம் சென்னை பார்ப்பனர் என்கின்ற பாறையில் மோதி உடைபட்டழும்கிவிட்டதாகவே தெரிய வருகிறது."

லாலாலஜபதி.

சந்தாதாரர்களுக்கு

அறிவிப்பு.

தோழர்களே!

நமது பகுத்தறிவுப் பத்திரிகைக்கு மே மாதம் முதல் இரண்டாவது வருடம் ஆரம்பமாவதால் முன் ஒரு வருட சந்தா செலுத்தி 1935 வரு மே மாதம் முதல் சந்தாதாரர்களாகச் சேர்ந்து பத்திரிகை வருவதை நிறுத்திக்கொண்டிருப்பவர்களுக்கும், புல்லது வேறு மாதங்களில் சந்தாதாரராகவும் சேர்ந்து மே மாதம் முதல் பத்திரிகை பெற்றுக்கொண்டு இருப்பவர்களுக்கும் வருகிற ஏப்பிரல் மாதம் 30-க்தேதியோடு சந்தாத்துகை முடிவடைகிறபடியால், இனி வரும் வருஷத்திற்கும சந்தாத் துகையை தாமதம் செய்து 30—4—36-க்குள் ஐந்து சேருமபடி மணி யார்டர் மூலம் அனுப்பி வைக்கக் கேட்டுக்கொள்கிறோம்.

வி. பி. மூலம் அனுப்பினால் அதிகப்படியாகச் செலவு ஆகிறதாகவும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். தயவு செய்து பணமோ அல்லது கடிதமோ எழுதும்போது சந்தா நம்பர் குறிப்பிடவும், [redacted] தவையில்லையென்று கருதினால் தயவு செய்து தெரிவித்து விடவும் வேண்டுகிறோம்.

அப்படி சந்தாத்துகை அனுப்பாதவர்களுக்கு 1936 மே மாதம் வெளியாகும் பத்திரிகை முதல் நிறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மானேஜர்.